கனி 9

புதிய

# தேடல்

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்

2025 செப்டம்பர்



## இதயம் விரியட்டும் மனிதம் மலரட்டும்...

ஆண்டு சந்தா : 130 | தனிப்பிரதி : 10

IATA

SINCE 1990

# Mangalam Travel & Tours

The Ultimate Travel Professionals

## WE SERVE

- Flight Tickets (Domestic & International )
- Visa Services GCC & Schengen (all categories)
- Holidays (In Bound / Out Bound )
- Travel Insurance
- PCC Certificate
- Foreign Exchange
- MICE
- Pligrimage Tours(Europe/Holyland)
- Passport Services
- Hotel Bookings (Domestic & International)
- Embassy Attestation Services
- Cruise Lines / Ferry Tickets
- Airport Assistance All Over The World
- Airport Lounge Bookings, Meet & Greet Services
- Bus/ Train Bookings
- Eurail /swiss Pass
- Un-accompanied Child Travel
- Educational Travel Assistance
- Car Rentals Throughout India

**B2B & B2C Services**

## ACCREDITATIONS

MINISTRY OF TOURISM GOVERNMENT OF INDIA | TAFI THE WAY FORWARD | TAAI SINCE 1951 | IATO INDIAN ASSOCIATION OF TOUR OPERATORS | kerala God's Own Country

IATA TAFI

MANGALAM Holidays (INDIA)PVT LTD
(Our Sister Concern)

## MARTHANDAM BRANCH

Vasantham Tower, Ground Floor, Main Junction, Marthandam - 629 165

Email : mdm@mangalamtravel.com Web : www.mangalamtravel.com

Contact : +91 95855 41102 | +91 70920 33117 | 04651 - 273115

**OUR BRANCHES**

TRIVANDRUM(HO) | COCHIN | CHENNAI | TRICHY | MADURAI | NAGERCOIL

**புதிய தேடல்**
*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

*ஆசிரியர்*
அருள் முனைவர். **இரா.பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*
அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)
அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)
திரு. **மு. அருளப்பன்** (துணைச் செயலர்)
அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)
அருள்பணி. **ஜாக்சன்**
**குமரி ஆதவன்**
திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)
அருள் முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**
அருள்பணி. **க. சுனில்**
திரு. **ஞா. எலியாசு**
திருமதி. **டி. மேரி விஜிலா**

*தொடர்பு முகவரி*
**புதிய தேடல்**
**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**
**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**
**அஞ்சல் எண் - 629 179**
**கைபேசி : 9443693505, 8525032383**
**மின் அஞ்சல்**: newputhiathedal@gmail.com

**தனிப்பிரதி : ₹ 10**
**ஆண்டு சந்தா : ₹ 130**
**ஆயுள் சந்தா : ₹ 2000**

விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| **பலவண்ண அட்டை வெளிப்பக்கம்** | : ₹ 12000 |
| **பலவண்ண அட்டை உள்பக்கம்** | : ₹ 7000 |
| **முழுப்பக்கம் கறுப்பு** | : ₹ 2000 |
| **அரைப்பக்கம் கறுப்பு** | : ₹ 1000 |



## *ஆசிரியரின் அன்பு வரிகள்*

அருள்முனைவர்,
**இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**

**புதுப்பிறப்படைய புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

**"ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை வாழும் முறையில் தான் இருக்கிறது"**

இதயங்கள் விரிந்து அன்பை புரியும் போது, அன்பு கண்ணீராகலாம். செந்நீராகலாம், ஆறுதல் அளிக்கும் நிழலாகலாம், ஆற்றல் அளிக்கும் நீரோடையாகலாம். அன்பை உணர்ந்தால் நீ வாழலாம், நான் வாழலாம், மனிதம் வாழலாம்.

நாம் சந்திக்கும் அவமானங்கள் நம்மை செதுக்க வேண்டும். நாம் பாடுபடும் துயரங்கள் நம்மை செதுக்கி வளர்க்க வேண்டும். உளியின் மீது புகார் செய்தால், கல் எப்படி சிற்பமாக முடியும்.

நம்முடைய உரையாடல், கற்பித்தல், வாழ்வியல் முறை இருண்ட வீட்டில் ஒளி ஏற்றுவதாக இருக்க வேண்டுமே தவிர, தூசி அகற்றுவதாக இருக்கக் கூடாது. எப்பொழுது ஒளி ஏற்றப்படுகிறதோ அப்பொழுது அவர்களாகவே தூசியை அகற்றிக் கொள்வார்கள்.

நாம் தனித்தன்மையானவர்கள் என்ற உணர்வுடன் நமக்குள் புதைந்து கிடக்கும் அற்புத புதையல்களை தேட ஆரம்பித்தால், நாரைகள் குஞ்சு பொரிக்கக் கண்டம் விட்டு கண்டம் பறந்து தன் இனத்தை காலங்காலமாய் வாழ வைப்பது போல் இதயங்கள் விரிந்து எண்ணங்கள் உயர நாம் வாழலாம். மனித மாண்போடு தலைமுறையையும் வாழ வைக்கலாம்.

நமது இதயங்கள் திறக்கட்டும். வன்முறையாலும், வெறுப்பாலும், குற்றுயிராய்க் கிடக்கும் சமூகத்தில் நமது அன்பின் செயல்கள் மருந்தாகட்டும். சாதி, மத, இன மொழிகளைக் கடந்து இயேசுவின் இதயம் விரிந்ததைப் போல் நாமும் இதயத்தை விரிப்போம் மனிதத்தை மலரச்செய்வோம்.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்க புதிய தேடல்**
**வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்!**

**"எண்ணங்கள் ஈடேற வேண்டும் என்றால் நல்ல எண்ணங்களை மட்டுமே விதைக்க கற்றுக்கொள்!"**

நம் எண்ணங்கள் வலிமையானவை, அவற்றை நாம் பூக்களைப் போல் தூவவும் முடியும், கற்களைப் போல் எறியவும் முடியும். நாம் பூக்களை தூவினால் அவை மாலையாக வருகின்றன, நாம் கற்களாக எறிந்தால் அவை காயங்களாக நமக்கே திரும்பி வருகின்றன.

மனிதன் பல்வேறு முகங்களைக் கொண்டவன். ஒரு நேரம் இரக்கத்தோடு இருப்பவன், மறுநேரம் அரக்கத் தனத்திற்கு மாறுகிறான். இதற்கெல்லாம் காரணம் இதயத்தில் மனிதம் மலராததுதான்! மானுடர் மனங்களில் மனிதம் மலர்ந்தால் பூமி அமைதியில் பூத்துக் குலுங்கி இருக்கும். வன்முறையும், சுயநலமும், அதிகார வெறியும் இந்த மண்ணை ரத்தத்தால் கழுவி இருக்காது. சாதி வேற்றுமைகள் வேரறுக்கப்பட்டிருக்கும். மதத்தை வைத்து அரசியல் செய்து லாபம் சம்பாதிக்கும் நிலை இருந்திருக்காது.

மனிதம் வெட்டுவதிலில்லை, கட்டுவதில் இருக்கிறது. வீழ்த்துவதிலில்லை, வாழ்த்துவதில் வாழ்கிறது. தாக்குவதிலில்லை, ஆக்குவதில் ஆழ்கின்றது. உடைப்பதிலில்லை, உண்டாக்குவதில் உள்ளது. நொறுக்குவதிலில்லை, உருவாக்குவதில் அடங்கியிருக்கிறது.

ஆணவம் தோல்வியடைகின்ற போது அன்பு வாழ்கிறது, வீண்மொழி தோற்கின்ற போதெல்லாம் நீதி நிலைநாட்டப்படுகின்றது, வன்மம் தோற்கின்ற போதெல்லாம் நல்லெண்ணம் தளிர்க்கின்றது. இதயத்தின் முகமூடி அகற்றப்படும் போது, மனிதநேயம் கருணையாய் கசிகின்றது, இதயம் விரிகின்றது. இலையுதிர் மரங்களும் பூக்க ஆரம்பிக்கும், உலகமே அன்பு மயமாய் மாறும். மனிதம் வாழும்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,
+ A. Albert
மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்டம்.

கனி 09 அகல் 15 செப்டம்பர் 2025


| எண் | படைப்பு |
|---|---|
| 1. | ஆசிரியரின் அன்பு வரிகள் |
| 2. | ஆயரின் அமுத மொழிகள் |
| 3. | அகிம்சை இனி வெல்லுமா? |
| 4. | சுற்றுலா மனித வாழ்வின் அடிப்படைத் தேவையா? ................ பணக்காரர்களின் ஆடம்பரமா? |
| 5. | அகிலமெங்கும் அன்னைத் தமிழை .... அழைத்துச் சென்ற தமிழன்னையின் ... தத்துப் பிள்ளைகள் |
| 6. | செபமாலை |
| 7. | பெண் குழந்தைகள் உலகின் வெளிச்சம் |
| 8. | வீடு வாழ நாட்டை வாழ வை |
| 9. | உலக மின் கழிவு தினம் |
| 10. | முதியோர் காப்பீர் தோழர்களே |
| 11. | வறுமை ஒழிந்ததா? வசந்தம் ........... மலர்ந்ததா? |
| 12. | காணாமல் போன கடிதங்களும், ........ மகிழ்ச்சியும்! |
| 13. | மாணவர்களின் நிலை அன்றும் இன்றும் ... |
| 15. | பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள் |
| 16. | ஆயரின் அலுவல்கள் |



# அகிம்சை இனி வெல்லுமா

பேரருள்பணி. M.C. ராஜன்.

மனித உயிர்களின் சிறப்பான பண்புகளில் ஒன்று, பிற உயிர்களுக்கு துன்பம் விளைவிக்காமல் இருத்தல். ஆறறிவு படைத்த மனிதன் தன்னைப் போல் பிறரையும் நேசிக்கிற குணம் கொண்டவன். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே திருவள்ளுவர் **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்** என்று சொல்லி வைத்தது, மனித உயிர்களுக்கு மட்டுமல்ல இயற்கையின் எல்லா அம்சங்களிலும் உயிரைத் தாங்கி இருக்கிற அனைத்து படைப்புகளுக்கும் இது சொந்தம். இயற்கையின் சுழற்சியில் நாம் எல்லோரும் உறவினர்கள் எல்லா படைப்புகளையும் நேசிக்க வேண்டியது நமது கடமை என்பதை தெளிவு படுத்துகிறது. சங்க கால பாடலில் புலவர் கணியன் பூங்குன்றனார் "**யாதும் ஊரே யாவரும் கேளிர்**" என்று அற்புதமான தத்துவத்தை தமிழ் கூறும் நல் உலகிற்கு விட்டுச் சென்றிருக்கிறார். இதன் பொருள் என்னவென்றால் "**எல்லா ஊர்களும் நான் பிறந்த ஊர்கள் தான், எல்லா மக்களும் என் உறவினர்கள் தான்**" என்பதாகும். எனவே நம்மை வேறுபடுத்துகிற சாதி, மதம், இனம், மொழி, பாலினம், பிறப்பிடம், சமூக அந்தஸ்து போன்ற வேறுபாடுகளை அடியோடு நீக்கிவிட்டு, மனிதத்தை மட்டும் நேசிக்கிற அற்புதமான பண்பு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் தமிழ் சமூகத்தின் வாழ்க்கை நெறியோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது.

அகிம்சை என்றால் "**எந்த ஒரு உயிரையும் உடல், மனம், சொல்லின் மூலமாக காயப்படுத்தாமல் அல்லது தீங்கு விளைவிக்காமல் இருப்பது**" என்பதாகும். அடிப்படையில் இது ஒரு வாழ்க்கை தத்துவம். மானுடர்கள் நடந்து செல்ல வேண்டிய வாழ்க்கை பாதை என்று சுருக்கமாக சொல்லிவிடலாம். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த மண்ணில் தோன்றிய தத்துவங்களான யோகம், பௌத்தம், சமணம், இந்து சமயத்தின் பல கூறுகள் இவற்றை தாங்கிப் பிடித்து இருக்கின்றன. வரலாற்றின் வழிநெடுகில் இந்த தத்துவத்திற்கு உயிரோட்டம் கொடுத்தவர் மகாத்மா காந்தியடிகள் ஆவார். அகிம்சையை எல்லா மூலை முடுக்குகளுக்கும், இந்தியா மட்டுமல்ல, உலகின் பார்வைக்கும் எடுத்துச் சென்றவர் நமது தேசப்பிதா **மகாத்மா காந்தி** அவர்கள். மாபெரும் சாம்ராஜ்யமான பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை தன்னுடைய அஹிம்சை தத்துவத்தால் ஆட்டம் காண வைத்தவர் என்றால் அது மிகையாகாது. அவர் வழியே வந்த அமெரிக்காவில் கறுப்பின விடுதலைக்காக போராடிய **மார்ட்டின் லூத்தர் கிங்** அகிம்சை தத்துவத்தின் வழியே தனது மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுத்தது வரலாறு. இவர்களின் பாதையில் தென்னாப்பிரிக்க வரலாற்றில் இன அடக்குமுறை, ஒடுக்கு முறைக்கு எதிராக அகிம்சை தத்துவத்தின் மூலம் போராடி மானுடத்திற்கு வெற்றி செய்தியைச் சொன்னவர் **நெல்சன் மண்டேலா.** 27 ஆண்டு கால தனிமை சிறைவாசம் கூட அவருடைய வைராக்கியத்தை உடைத்து விட முடியவில்லை. இப்படி ஏராளம் பேர் வரலாற்றை வளப்படுத்தியவர்கள் என்றால் மிகையாகாது.

ஆனால் இவர்களுக்கெல்லாம் முன்னோடி **நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து** தான். வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தையும் காட்டு என்று சொல்லித் தந்தவர்; அவருடைய சீடர்கள் அப்படித்தான் வாழ வேண்டும் என்று தன்னுடைய

வாழ்க்கையால் கற்றுக் கொடுத்தவர். அஹிம்சை தத்துவத்தை உலகின் நாலாப் பக்கங்களிலும் எடுத்துச் சென்றவர்களில், கிறிஸ்தவ சமூகத்திற்கு முதலிடம் இருக்கிறது என்பதை மறக்க முடியாது.

ஏனென்றால் அகிம்சையின் அடிப்படை தத்துவம் "**பிறருக்கு தீங்கு செய்யாமை, பிறருக்கு அன்பு மற்றும் இரக்கம் காட்டுதல், கோபத்தை தவிர்த்தல், எதிர்க்க வேண்டிய சூழல் எழுகிற பொழுது வன்முறையற்ற எதிர்ப்பு**" போன்றவை ஆகும். **தன்னை தியாகம் செய்து, தன்னை வருத்திக்கொண்டு பிறருக்கு நன்மை செய்வதே அகிம்சையின் அடிப்படை கோட்பாடு.** ஆனால் இன்று இந்திய மண்ணில், காந்தியடிகள் வழிகாட்டிய பாதையில் மானிட உரிமைகளை வென்றெடுக்க முடியுமா என்கிற கேள்விக்குறி எழுந்திருக்கிறது. காரணம் அகிம்சை பேசிய இயேசுவை அன்றைய வன்முறையான அரசுகள் சிலுவையில் தொங்க விட்டுக் கொன்றன. அகிம்சையையே ஆடையாக போர்த்திக் கொண்ட காந்தியடிகள், மத வெறியன் ஒருவனுடைய குண்டுக்கு இரையாக வேண்டியிருந்தது. தன்னுடைய மக்களுக்காக போராடிய மார்ட்டின் லூதரின் உடலையும் சல்லடைகளாக குண்டுகள் துளைத்தன.

இங்கே தான் அகிம்சையைப் பற்றிய ஆழமான ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு விதமான உறவுகள் இருக்கின்றன.

1. **தனிமனித உறவு**
2. **சமூக உறவு**

தனி மனித உறவுகளில் எப்போதும் இயேசு கற்றுக் கொடுத்த, காந்தி வாழ்ந்து காட்டிய, மார்ட்டின் லூதர் கிங் செயல்படுத்திய அகிம்சையை கண்டிப்பாக நாம் கடைபிடிக்க வேண்டும். தேவைப்படுகிற இடங்களில் எல்லாம் நாம் ஒருவேளை வலது கன்னத்தில் அறையப்பட்டாலும், இடது கன்னத்தையும் காட்ட தயாராக இருக்க வேண்டும். ஆனால் சமூக உறவுகளில் அப்படி இருப்பது என்பது சில அடிப்படை குணங்களுக்கு உட்பட்டது. குறிப்பாக சமூக உறவுகளில், ஜனநாயக சக்திகள், மக்கள் நல அரசுகளாக இருக்கும்போது நாம் அகிம்சை வழியில் நம்முடைய எதிர்ப்பை பதிவு செய்ய முடியும். அது அந்த அரசுக்கோ அல்லது மக்கள் அமைப்புக்கோ, சமூகத்திற்கோ புரியும். ஆனால் இத்தகைய அமைப்புகள் அல்லது அரசுகள் மக்கள் விரோத, பாசிச, பிறரை அழிக்கும் அரசுகளுக்கு இது பொருந்தாது. காரணம் **புரட்சியாளர் மாவோ** அழகாக சொல்லுவார் "**நான் எந்த ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதை என் எதிரி தீர்மானிக்கிறான்**". உண்மைதான், நாம் புன்னகையோடு செல்ல வேண்டுமா இல்லை ஆயுதத்தோடு செல்ல வேண்டுமா என்பதை நம்மை ஆள்வோரின் திட்டங்களும், சட்டங்களும், செயல்முறைகளும் தீர்மானிக்கின்றன.

அந்த விதத்தில் இன்றைக்கு நம்மை ஆளும் ஒன்றிய அரசு, சிறுபான்மையினர் நலனுக்கு எதிரான, தொழிலாளர்களுக்கு எதிரான, பெண்களுக்கு எதிரான, ஏழைகளுக்கு எதிரான, தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான, பழங்குடியின மக்களுக்கு எதிரான ஒட்டுமொத்தத்தில் பெரும்பான்மை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும், மாண்புக்கும் எதிரான செயல்களை செய்து கொண்டிருக்கிற பொழுது, அகிம்சையால் இந்த அரசை நாம் வெற்றி கொள்ள முடியாது என்பது தெளிவாகிறது. எனவே சட்டத்திற்கு உட்பட்டு என்னென்ன நெறிமுறைகளில் நாம் போராட அழைக்கப்பட்டிருக்கிறோமோ, அப்படியே நமது மானுட உரிமைகளை, மனித மாண்பை வென்றெடுப்பதற்கு, அதனை அழிக்க நினைப்பவர்களை எதிர்த்து உறுதியோடு போராட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. காரணம், இயேசுவே தான் அநியாயமாக அறையப்பட்ட பொழுது **ஏன் என்னை அடித்தாய்** என்று தான், தன் வாழ்க்கையில் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். எனவே தனிமனித உறவுகளில் துன்பத்தைத் தாங்கிக் கொண்டு பிறரை நேசிக்கவும், சமூக உறவுகளில் அநியாயமாக அடிக்கப்படுகிற பொழுது, அநீதியோடு கரம் கோர்ப்பவர்களை அழிப்பதுமே உண்மையான நீதியாகும். அதுவே இன்றைய தேவை.

# சுற்றுலா : மனித வாழ்வின் அடிப்படைத் தேவையா? பணக்காரர்களின் ஆடம்பரமா?

**அனீஷ் ராஜ்,**
மெய்யியல் முதலாம் ஆண்டு.

மனித வாழ்க்கை என்பது தேவையை நிறைவேற்ற ஒன்றன்பின் ஓடிக்கொண்டே இருக்கும் ஒருவித பயணம், வேலை, பொறுப்பு, குடும்பம், சமூக உறவுகள் ஆகியவற்றால் நிறைந்த வாழ்க்கை. இத்தனை சுமைகளைத் தாங்கிக்கொண்டு செல்வதில், மனித மனம் ஓய்வையும் புத்துணர்ச்சியையும் நாடுகிறது. அப்போது மனிதன் தேர்ந்தெடுக்கும் ஒரு சிறந்த வழி தான் சுற்றுலா. ஆனால் கேள்வி என்னவெனில், சுற்றுலா மனித வாழ்வின் அடிப்படைத் தேவையா? அல்லது பணக்காரர்களின் ஆடம்பரமா?

சுற்றுலா பழங்காலம் முதலே மனிதர்களின் வாழ்வில் இடம்பெற்றது. பண்டைய இந்தியாவில் யாத்திரைகள், கங்கை, யாழ்ப்பாணம், காசி, காஞ்சி போன்ற புனிதத் தலங்களுக்கு மக்கள் சென்று வந்தனர். கிரேக்கர்களும் உரோமானியர்களும் தமது நகரங்களை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி, வணிகம் மற்றும் பண்பாட்டை அறிந்து கொண்டனர். அத்தகைய பயணங்களை,



இன்று நாம் "சுற்றுலா" என்று பெயரிட்டு அழைக்கின்றோம்.

சிலர், பயணம் மேற்கொள்வதை அவசியமாக நினைக்கின்றனர். ஓய்வெடுத்தல், புதிய இடங்களைப் பார்வையிடுதல் அல்லது தெரிந்தவர்களை சந்தித்தல் என்று கூறிக்கொண்டே போகலாம். ஆனால் பலருக்கு, சுற்றுலா என்பது ஒரு அதிக செலவான, சிலருக்கு மட்டுமே கிடைக்கும் வாய்ப்பு என்று தோன்றும். சுற்றுலா புதிய இடங்களைப் பார்க்கவும், புதிய கலாச்சாரங்களை அறியவும் உதவுகிறது. இது உலகளாவிய புரிதலையும், மதிப்பையும் வளர்க்கிறது. பயணம் செய்வதன் மூலம், பல்வேறு நாடுகளின் மரபுகளை புரிந்து கொள்ள முடியும். இது மக்களுக்குள் இணக்கம் மற்றும் புரிதலை அதிகரிக்கின்றது. சுற்றுலா பல நாடுகளுக்கு முக்கிய பொருளாதார ஆதாரமாக விளங்குகிறது. பயணிகள் பணத்தை செலவிடுவதால் உள்ளூர் வியாபாரங்கள், கடைகள் மற்றும் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. இது பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, மக்கள் நன்மைகள் அடைய வழிவகுக்கிறது. பயணம் என்பது ஒருவகை ஓய்வை வழங்குகிறது. புதிய இடங்களைக் காணும் போது, அவ்வப்போது மன அழுத்தத்தைக் குறைத்து, மனநலனையும் உடல்நலனையும் மேம்படுத்துகிறது. இயற்கையில் சுற்றி யுள்ளவாறு புதிய அனுபவங்கள், ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியை கொண்டுவர முடியும். சுற்றுலா வளர்ச்சியால், பல இடங்களில் சாலைகள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகள் போன்ற கட்டமைப்புகள் மேம்படுகின்றன. இந்த மேம்பாடுகள், சுற்றுலா பயணிகளுக்கு மட்டுமல்ல, உள்ளூர்

மக்களுக்கு கூட பல நன்மைகளைத் தருகின்றன. புதிய இடங்கள், பழமையான கட்டிடங்கள், அருங்காட்சியகங்கள், இயற்கை வளங்கள் போன்றவற்றைக் காணும்போது மனித அறிவு விரிவடைகிறது. மேலும், வேறு இடங்களில் வாழும் மக்களின் உணவு, உடை, பழக்கவழக்கம் ஆகியவற்றை அறிந்து கொள்வதன் மூலம் பண்பாட்டு பரிமாற்றம் ஏற்படுகிறது. இயற்கையோடு நேரம் செலவழிப்பது உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கும் பெரும் நன்மையாக அமைகிறது. இதனுடன், சுற்றுலா பயணங்களில் குடும்பத்தினர் இணைந்து செல்வதால் அவர்களிடையே உறவுகள் வலுவடைகின்றன. எனவே, சுற்றுலா என்பது ஒரு ஆடம்பரச் செயல் அல்ல மாறாக மனித வாழ்வின் ஆரோக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் தேவையான, பயனுள்ள செயலாகவே இன்றளவும் பார்க்கப்படுகிறது.

ஆனால், இன்றைய சூழலில் சுற்றுலா பெரும்பாலும் ஆடம்பரமாக மாறி வருகிறது. பணக்காரர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு புகைப்படங்கள், வீடியோக்கள் மூலம் சமூக ஊடகங்களில் தமது ஆடம்பரத்தைக் காட்டிக்கொள்வதும், பல இடங்கள் விலையுயர்ந்ததாக மாறி ஹோட்டல், போக்குவரத்து, உணவு ஆகியவை சாதாரண மக்களுக்கு எட்டாக் கனியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், யார் எங்கு சுற்றுலா சென்றார்கள்? என்ற கேள்வி சமூகத்தில் ஒப்பீட்டையும் பெருமிதத்தையும் உருவாக்கி, சுற்றுலாவை ஒரு தேவையை விட போட்டி மனப்பாங்காக மாற்றுகிறது. சில நேரங்களில் அதிகமான சுற்றுலா பயணிகள் ஒரே இடத்தில் சேரும் போது, அது இடங்களை அழித்து, மாசு, குப்பைகள் போன்ற சூழல் கேடுகளை ஏற்படுத்துகின்றன. முக்கியமான இடங்கள், நீரூற்றுகள் மற்றும் பழங்கால இடங்கள் பாதிக்கப்படலாம். சில இடங்களில், சுற்றுலாவுக்கு பொருத்தமான முறையில் உள்ளூர் கலாச்சாரங்கள் மாற்றப்படுகின்றன. இது, உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கிடையிலான அனுபவத்தில் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது, சில சமயம் மரபு முறைகளை கலைத்துவிடுகின்றன. பெரும்பாலான லாபம் பெரிய வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சென்று, உள்ளூர் மக்களுக்கு மிகவும் குறைவான நன்மையே கிடைக்கிறது. ஆனால், சில சமயங்களில் அது சமூகப் பாகுபாடுகளுக்கும் சூழலியல் சேதங்களுக்கும் காரணமாகி, ஆடம்பரமாகவும் மாறுகிறது. அதனால், மனிதன் சுற்றுலாவைப் பயன்படுத்தும் விதமே முக்கியம். அது மனித அறிவைப் பெருக்க, மனதை அமைதிப்படுத்த, குடும்ப உறவை வலுப்படுத்த பயன்படுத்தப்பட வேண்டும்.

சுற்றுலா மனித வாழ்வின் தேவையா? ஆம், அது தேவையாகும். ஆனால், அது



ஆடம்பரமாக மாறக்கூடாது. பணக்காரர்கள் என்று காட்டிக்கொள்வதற்கான வழியாக அல்லாது, ஒவ்வொரு மனிதனும் தன் திறனுக்கு ஏற்றவாறு இயற்கையோடு, பண்பாட்டோடு, வரலாற்றோடு இணைவதற்கான வழியாகச் சுற்றுலாவைப் பயன்படுத்த வேண்டும். “**சுற்றுலா என்பது மனிதனின் உள்ளார்ந்த அமைதிக்கான தேவை. மாறாக சமூகத்தில் வெளிப்படுத்தப்படும் ஆடம்பரம் அல்ல**”.



## அகிலமெங்கும் அன்னைத் தமிழை அழைத்துச் சென்ற

# தமிழன்னையின் தத்துப் பிள்ளைகள்

பேரருள்பணி. **ம. டேவிட் மைக்கேல்**

உலக மொழிகளில் உயர்தனி செம்மொழி என மகுடம் தரித்து ஆற்றலோடும் செயலாக்கத்தோடும் இளமை குன்றாது நிமிர்ந்த நடைபோடும் தன்னிகரற்ற மொழி தமிழ்மொழி, உலகோரை எட்ட ஏணியாகவும், பாலமாகவும் இருந்த பெருமைக்குரியவர்களில் பலர் தமிழை தாய்மொழியாகவோ, தமிழ்மண்ணில் பிறந்து வளர்ந்தவர்களாகவோ இல்லாமல் தமிழ் வாசனையே அறியாத அன்னிய பூமியில் அதுவும் ஐரோப்பிய மண்ணில் பிறந்தவர்கள் ஆவர். சமயம் போதிக்கும் பணியின் நிமித்தம் தமிழ் மண்ணுக்கு வந்த இவர்கள் அன்னை தமிழின் சுவை அறிந்து, அதன் தொன்மைவளம் தெரிந்து, இலக்கிய இன்பத்தால் ஈர்க்கப்பட்டு, தமிழன்னையின் தத்துப் பிள்ளைகளாக தங்களை மாற்றிக் கொண்டார்கள். தமிழ்தாய் ஈன்ற பிள்ளைகளுக்கு சற்றும் இளைக்காதவர்களாய், தமிழுக்கும், தமிழ் மண்ணுக்கும் தகைசால் தொண்டாற்றி, தவிர்க்க முடியாத ஆளுமைகளாக தமிழ் வரலாற்றில் இடம்பிடித்து கொண்டார்கள். இவர்களை நினைவுகூர்வதும், இவர்களின் ஈடு இணையற்ற தமிழ்த்தொண்டை தமிழ் கூறும் நல்லுலகிற்கு நினைவூட்டுவதும் காலத்தின் கடமையாகும்.

தேம்பாவணி தந்த வீரமாமுனிவர், தமிழுக்கு புது வார்த்தைகளைத் தந்த இராபர்ட் தே நோபிலி, தமிழ் மாணவனாய் தன்னை பிரகடனப்படுத்திக் கொண்ட ஜி.யு.போப், கவிதைச் சொற்களைத் தமிழுக்கு தந்த பார்த்தலோமேயு சீகன்பால்கு, திராவிட மொழி ஆய்வு செய்து தமிழின் தன்னிகரற்றத் தன்மையை உலகிற்கு சொன்ன இராபர்ட் கால்டுவெல், தமிழிலக்கண நூல் தந்த ஆல்பர்ட் ஹென்றி ஆர்டன், சிலப்பதிகாரத்தை ஆங்கில உலகத்திற்கு அறிமுகப்படுத்திய ஆலன் டேனியேல், திருவிவிலியத்தை முதன்முதலில் தமிழிலே மொழி பெயர்த்த ஜோகன் பிலிப் பாப்பிரிசியஸ், ஓலைச் சுவடியிலிருந்த தமிழமுதை முதலில் அச்சில் ஏற்றி அழகுபார்த்த ஹென்றிக் ஹென்றிக்ஸ், தமிழ்மறையின் அடையாளமான ஆழ்வார் பாடல்களை அச்சில் வெளியிட்ட கூப்பர், தமிழ்ப் பழமொழிகளை சுவைகுன்றாமல் ஏடுகளாக்கி வெளியிட்ட ஜென்சன் ஹெர்மன், அன்னை தமிழின் அழகுச் சொற்களைப் பிரெஞ்சு மொழியில் பிரதி எடுத்து தந்த எம்.ஏ. லேப், தமிழில் வலம் வரும் பழமொழிகள் குறித்தும், தமிழ் இலக்கணம் குறித்தும், நூல் எழுதிய லாசரஸ், தமிழ் நூல்களை தொகுத்து குறிப்புகள் வெளியிட்ட ஜான் மொர்டாக், ஔவை பாட்டியின் அறநீதிப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பீட்டர் பெர்சீவல், தமிழ் இலக்கணத்தைக் கற்றறிந்து நூல் வடித்த ரேனியஸ், தமிழ் சமயமான சைவ சித்தாந்தம் மேல் ஈடுபாடு கொண்டு விளக்க நூல்கள் எழுதிய ஹெல்கோ வியார்டோ ஸ்கோமெரஸ், தமிழ் இலக்கணத்தை பிரெஞ்சு மொழியில் எழுதி வெளியிட்ட ஜூலியன் வின்சன் மற்றும் அறுபத்தி ஏழாயிரம் சொற்களுடன் தமிழ்-ஆங்கில அகராதி படைத்த வின்சிலோ மிரன் உள்ளிட்ட பேராளுமைகள் அன்னை தமிழுக்கு

அழகு சேர்த்த தமிழன்னையின் தவப் புதல்வர்களாகவும், தத்துப்புதல்வர்களாகவும் திகழ்கிறார்கள்.

**கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி**

இத்தாலியில் பிறந்து கத்தோலிக்க பெற்றோரால் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி



என்னும் பெயரில் திருமுழுக்கு பெற்று இயேசு சபையில் இணைந்து அருள்பணியாளராகி தமிழ்நாட்டுக்கு இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க வந்தார். தமிழின் மீது தீராதக் காதல் கொண்டவரானார். தான் பிறந்த மண்ணை மறந்து தமிழ் மண்ணை ஏற்றுக்கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் தமிழ் மொழிக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் தொண்டாற்றி தன் காலத்தைக் கரைத்தார். அன்னை தமிழ்மீது கொண்ட பற்றால் தன் இயற்பெயரை வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டார். பல இலக்கிய நூல்களை தமிழுக்குத் தந்தவர். கொடுந்தமிழ் இலக்கணம், பரமார்த்த குருவின் கதைகள், தமிழ்-இலத்தீன் அகராதி, இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட செந்தமிழ் இலக்கணம், பாடநூலாய் விளங்கும் பரமன் சரித்திரம், தொன்னூல் விளக்கம், சதுரகராதி என்னும் சொற்களஞ்சியம், வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம் ஆகிய நூல்களால் அன்னை தமிழுக்கு வீரமாமுனிவர் அழகு சேர்த்தார். காலத்தால் அழியாத அவரது தேம்பாவணி அவரின் தமிழறிவுக்கு தலைசிறந்தச் சான்று. திருக்காவலூர் கலம்பகம், திருக்குறள் உரை, கித்தேரியம்மாள் அம்மானை, குறிப்புரை, இறைகுறவனார் போன்ற இலக்கியங்கள் வீரமாமுனிவரை தமிழிலக்கிய உலகில் நிலைபெறச் செய்யும் நிலைக்கண்ணாடிகள்.

**இராபர்ட் தே நோபிலி**

தத்துவப் போதக சுவாமிகள் என அழைக்கப்படும் இராபர்ட் தே நோபிலி இத்தாலியின் பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர். தன் இருபத்தாறு வயதில் இயேசு சபையில் இணைந்து அருள்பணியாளராக திருப்பொழிவு பெற்று கத்தோலிக்க சமய பணியாற்ற தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தார். மதுரையை மையமாக கொண்டு தமிழ்த் துறவியாய் வாழ்ந்து சமயப் பணியும் புரிந்தார். வேதங்கள், புராணங்களை ஆராய்ந்தறிந்து வடமொழி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். தமிழில் நாற்பது உரைநடை நூல்கள், மூன்று கவிதை நூல்கள் என நீண்ட இவரது இலக்கியப் பணியில் ஞானோபதேச காண்டம், மந்திரமாலை, ஆத்தும நிர்ணயம், தத்துவக் கண்ணாடி, சேசுநாதர் சரித்திரம் போன்றவை இவரது தமிழ்ப் பற்றுக்கு கட்டியம் கூறுபவை ஆகும். தமிழ் புலமையும் கிறித்தவ இறையியல் வலிமையும் கொண்ட இவர் ஒருமுறை துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுடன் சமய வாதம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜார்ஜ் யுக்ளோ போப்**

ஜார்ஜ் யுக்ளோ போப் என்னும் இயற்பெயருடன் கனடாவில் கிறித்தவ குடும்பத்தில் பிறந்து, சமயப் போதகராக தமிழ்நாட்டுக்கு வந்து நாற்பது ஆண்டுகாலம்

தமிழன்னைக்கு சேவகம் செய்து கல்லறையில் துயில் கொண்ட இடத்திலும் "**இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்**" என்று எழுத வைத்தவர் ஜி.யு.போப். இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் இருபத்து மூன்று ஆண்டுகள் தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக பணியாற்றினார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இவர் புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் ஆகிய நூல்களை பதிப்பித்தார். தமிழ்மீது கொண்ட தீராத தாகத்தால் இவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தமிழ்நாட்டுக்கு வரும் வழியில் கப்பல் பயணம் செய்த எட்டு மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றுக் கொண்டார். சாயர்புரத்தில் தங்கியிருந்து இலக்கிய இலக்கணங்களை கற்றறிந்தார். கிறித்தவத்திற்கு மாறிய பின்பும் சாதிய ஏற்றத்தாழ்வு பாராட்டிய தமிழ் சமூகத்திற்கு இறைவன்முன் அனைவரும் சமம் என்று வலியுறுத்திப் போதித்தார். தன்னை தமிழ் மாணவனாக பெருமை பாராட்டி கல்லறையில் குறிப்பெழுதி அங்கே நீள்துயில் கொள்ளும் ஜி.யு.போப் தமது கல்லறையின் சிறு பகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையால் அமையவேண்டும் என ஆசைப்பட்டார். அவ்வாறே தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறளையும் திருவாசகத்தையும் கல்லறையில் தன் உடலோடு வைத்து அடக்கம் செய்யவேண்டும் என்று உயில் எழுதி வைத்தது தமிழை அவர் எந்த அளவுக்கு நேசித்தார் என்பதற்கு உறுதியான சான்றாகும்.

**பார்த்தலோமேயு சீகன்பால்கு**

ஜெருமனியில் கிறித்தவ லூத்தரன் பிரிவில் பிறந்து போதகராகி தமிழ்நாட்டுக்கு வந்த முதலாவது சீர்திருத்த கிறித்தவ மதப் போதகர் பார்த்தலோமேயு சீகன்பால்கு ஆவார். இந்திய மொழிகளில் முதன்முதலில் விவிலியம் சீகன்பால்குவினால் மொழிபெயர்க்கப்பட்டு



அச்சேறியது. தமிழ்நாட்டின் தரங்கம்பாடியில் தங்கியிருந்து தமிழ்பணியும், கிறித்தவபணியும் செய்தார். சென்னை மற்றும் கடலூரில் பள்ளிக்கூடங்களை நிறுவினார். கத்தோலிக்க மறைப்பணியாளர்களின் வழிமுறைகளை பின்பற்றியே விவிலியத்தை தமிழில் மொழிபெயர்த்தார். தரங்கம்பாடியில் இறையியல் கல்லூரியையும் நிறுவினார். தமிழையும் தமிழரைப்பற்றியும் உலக அரங்கில் எடுத்துச் சொன்னவர் சீகன்பால்கு. மொழிபெயர்ப்பு பணியோடு சீகன்பால்கு சில நூல்களையும் எழுதினார். இலத்தீன் மொழியில் தமிழ் இலக்கணம், தமிழ்– ஜெர்மன் அகராதியை உருவாக்கினார். பல கிறித்தவ பாடல்களை தமிழுக்கு மொழிபெயர்த்தார். ஐரோப்பிய இராகங்களுக்கு இசைந்த திருப்பாடல்களை தமிழ் இராகங்களுக்கு ஏற்ற கீர்த்தனைகளாக மாற்றினார்.

**இராபர்ட் கால்டுவெல்**

அயர்லாந்து நாட்டில் பிறந்த இராபர்ட்

கால்டுவெல் ஒரு கிறித்தவ சமய பரப்பாளர். சாதாரண மக்களுக்கு விவிலியத்தை அவர்களது வட்டார மொழியில் கற்பிப்பதற்காக தமிழை கற்றார். இதுவே பின்னர் அவரை தென்னிந்திய மொழிகளுக்கான ஒப்பிலக்கண நூலை எழுத வைத்தது. திராவிட மொழிகளின் தனித்துவத்தை நிலைநிறுத்தியதில் இவருக்குத் தனிப்பங்கு உண்டு. தமிழ்நாட்டின் இடையன்குடி ஊரில் ஐம்பது ஆண்டுகள் தங்கி தமிழ்பணியும், சமய பணியும் ஆற்றினார். உலகின் மூத்த மொழி தமிழ் என்பதையும் மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னடம் யாவும் தமிழ் மற்றும் பிறமொழி கலப்பில் வந்தது என்றும் கண்டுபிடித்தார். இவர் ஆங்கில மொழியில் ஆக்கிய திராவிட மொழியின் ஒப்பிலக்கணம் உலகெங்கும் இவருக்கு பெரும்புகழ் ஈட்டித் தந்தது. தமிழ் வடமொழியோடு எவ்வித தொடர்பும் அற்றது என்றும் இது திராவிட குடும்பத்தில் மூத்தது என்றும் உலகிற்கு அறிவித்தார். நற்கருணை, பரதகண்ட புராதனம் ஆகியவற்றை தமிழில் இயற்றினார். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், திருநெல்வேலி அரசியல் பொது வரலாறு, திருநெல்வேலி சாணார்களின் வரலாறு, குடுமியின் மீதான அவதானிப்புகள், கிறித்தவத்துக்கு இந்து மதத்துடன் உள்ள தொடர்பு உள்ளிட்ட ஆங்கில நூல்களையும் எழுதினார்.

**ஆல்பர்ட் ஹென்றி ஆர்டன்**

தமிழ்மொழியின் தமிழின் இலக்கண வளர்ச்சியை ஆராய்ந்து அறிந்து நூல் எழுதியவர். கிறித்தவ இலக்கிய கழகத்தால் வெளியிடப்பட்ட இந்நூல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இங்கிலாந்தில் பிறந்த இவர் தமிழ்நாட்டில் சமயப்பணியோடு தமிழ் இலக்கியப் பணியும் ஆற்றினார்.

**ஆலன் டேனியேலு**

பிரெஞ்சு நாட்டை சேர்ந்த ஆலன் டேனியேலு தன் வாழ்நாளில் பெரும்பகுதியை தமிழநாட்டில் கழித்தவர். தொன்மவியல் மற்றும் இசையில் வல்லுநரான ஆலன் வேதம், இந்து தத்துவம் மற்றும் சைவ சித்தாந்தம் கற்றுணர்ந்து ஆய்வு மேற்கொண்டார். காசியில் இந்து பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றினார். தமிழ் இலக்கியங்கள் மீது தீராத பற்றுகொண்ட இவர் சிலப்பதிகாரத்தை அதன் அழகும் நடையும் மாறாமல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். மணிமேகலையையும் ஆங்கிலத்தில் புதுநடையில் மொழிபெயர்த்தவர்.

**ஜோகன் பிலிப் பாப்பிரிசியஸ்**

ஜெர்மனி நாட்டில் பிறந்த இவர் லூத்தரன் கிறித்தவ சமய பிரிவைச் சார்ந்த சமய போதகராகி தமிழ்நாட்டுக்கு வந்து பணியாற்றியவர். தரங்கம்பாடியில் பணியாற்றிய இவர் தமிழிலக்கியத்தையும் செய்யுளையும் கற்றறிந்தார். ஒன்பதாயிரம் சொற்கள் கொண்ட ஆங்கில-தமிழ் அகராதியை வெளியிட்டார். சீகன்பால்கு மொழிபெயர்த்து வெளியிட்ட விவிலியத்தை திருத்தங்களுடன் தரமானதாகவும், பிழையில்லாததாகவும் உருவாக்கினார். மொழிபெயர்ப்பு பணியில் கடுமையாக உழைத்து சிறப்பானதாக அதை வெளியிட்டார். இவர் வெளியிட்ட மொழிபெயர்ப்புதான் விவிலியத் தமிழ் மொழிபெயர்ப்பின் வசன நடையில் வெளிவந்த பெரிய வசனநடை நூல் ஆகும். இன்று சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் கிறித்தவ தமிழுக்கு இவரது மொழிபெயர்ப்பே ஆதாரமாக விளங்குகிறது. இவரது திருப்பாடல்களின் மொழிப்பெயர்ப்பே இவர்கள் அதிகமாக பயன்படுத்தும் திருப்பாடல்கள் ஆகும்.

**ஹென்றிக் ஹென்றிக்ஸ்**

போர்ச்சுகீசிய சமய போதகரான ஹென்றிக் ஹென்றிக்ஸ் என்பவர் தமிழுக்கும் கிறித்தவ சமயத்துக்கும் தொண்டாற்றியவர். தமிழ் நூல்கள் அச்சாக்கம் பெற தொடங்கிய காலத்தில் அச்சுக் கூடத்தை நிறுவி தமிழில் நூல்களை நேர்த்தியாக அச்சிட்டவர். தம்பிரான்

வணக்கம் என்ற நூலினை அச்சிட்ட இவர் கிருசித்தியானி வணக்கம் என்ற புகழ்பெற்ற நூலையும் அச்சிட்டார்.

**ஜான் ஸ்டெர்லிங் மோர்லிங் கூப்பர்**

ஜான் ஸ்டெர்லிங் மோர்லிங் கூப்பர் என்ற இயற்பெயர் கொண்ட இவர் ஸ்காட்லாந்தில் பிறந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்று இந்தியாவிற்கு சமயப் பணியாற்ற வந்தவர். இந்திய விவிலிய சங்கத்தில் முதல் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றியவர். பல்வேறு மொழிபெயர்ப்புகளை செய்தவர். ஆழ்வார் பாடல்களை அச்சிட்டு வெளியிட்டு பெருமை சேர்த்தவர்.

**ஹெர்மன் ஜென்சன்**

ஜெர்மனிய அறிஞரான ஹெர்மன் ஜென்சன் தமிழ் பழமொழிகளின் வகைப்படுத்தப்பட்ட தொகுப்பை ஆங்கிலத்தில் வெளியிட்டு பெருமை சேர்த்தவர். ஐரோப்பியர்கள் தமிழ் கற்றுக்கொள்ளும் வகையில் பல நூல்களை உருவாக்கி உள்ளார்.

**எம்.ஏ.லேப்**

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த மொழியறிஞரான எம்.ஏ.லேப் தமிழ்மொழி சொற்கள் குறித்து ஆய்வு செய்து பிரெஞ்சு மொழியில் பல நூல்களை எழுதியுள்ளார்.

**ஜான் லாசரஸ்**



தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ்பணியும் கிறித்தவ பணியும் இணைந்து செய்த அறிஞர்களில் ஒருவர் ஜான் லாசரஸ் ஆவார். இவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். சென்னை பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்த இவர் மாணவர்களுக்கென்று ஆங்கில மொழி பெயர்ப்புடன் கூடிய நன்னூல் என்ற இலக்கண நூலை வெளியிட்டார். திருக்குறளின் முழு மொழிபெயர்ப்பையும் அவர் வெளியிட்டது தமிழ் இலக்கியத்திற்கு செய்த பெரும் பங்களிப்பாக கருதப்படுகிறது.

**ஜான் மொர்டாக்**

ஸ்காட்லாந்தை சேர்ந்த கிறித்தவ மதப்போதகரான இவர் இந்தியாவிலும், இலங்கையிலும் தமிழ் இலக்கிய மற்றும் கிறித்தவ பணிகளை ஆற்றியவர். சென்னை கிறித்தவ இலக்கிய கழகத்தை தோற்றுவித்தவர். 1865ஆம் ஆண்டுவரை தமிழில் வெளிவந்த சமயம், தத்துவம், இலக்கியம், மொழியியல், கணிதம், புவியியல் மற்றும் வரலாறு இதழ்கள் செய்தித்தாள்கள் என்று ஒவ்வொரு வகையிலும் அச்சாகி வெளிவந்துள்ள நூல்களின் எண்ணிக்கை, பெயர், ஆசிரியர் உள்ளிட்ட நூலின் குறிப்புகளை வெளியிட்டார். இதுவே தமிழில் வெளிவந்த முதல் நூல் விபரப் பட்டியல் நூலாக அறியப்படுகிறது.

பல்வேறு சிறப்புகளையும் சிகரங் களையும் உயரங்களையும் உள்ளடக்கிய அன்னை தமிழ் அகில உலகெங்கும் அதன் சீரிளமை சிறப்பியலோடு அறியப்படுவதற்கு தமிழ் மண்ணில் பிறக்காமல் தமிழ் மண்ணை தம் மண்ணாகவும் தமிழை தன் உயிர்மூச்சாகவும் கொண்டு வாழ்ந்த பெருமக்கள் பெருமைக்கும் மாண்புக்கும் உரியவர்கள். அயல்நாட்டில் பிறந்தாலும் அயல்மொழி பேசி திரிந்தாலும் தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் தொண்டாற்றிய கிறித்தவ மறை பரப்பாளர்கள் தமிழ் இருக்கும் காலம்வரை தவிர்க்க முடியாத ஆளுமைகளாகவே இருப்பர். கிறித்தவ மறையையும் வளர்த்து, தமிழையும் வளர்த்த இவ்வறிஞர்களால் தமிழன்னையும் திருஅவையும் பெருமையும் உவகையும் கொள்கிறார்கள்.



# செபமாலை

அருள்பணி. **மரிய டேவிட் ஆன்றணி** CMF,
மைலோடு, பங்குத்தந்தை.

**செபமாலையின் வலிமையும் வரமும்**

செபமாலை "**திருச்சபையின் செபம்**" என்று ஐந்தாம் பத்திநாதர் அறிவித்தார். கத்தோலிக்க கிறித்தவர்களில் செபமாலை செபிக்கத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. சிறுவயது முதலே முதலில் படிக்கும் செபங்கள், செபமாலையோடு தொடர்புடைய செபங்களே. மிக எளிய, எல்லோரும் செபிக்க, தியானிக்க, பயன்பெற, ஆற்றல் பெற, வரங்கள் பெற வாய்க்காலாக இருப்பது செபமாலையே. மீட்பின் வரலாற்றில் மீட்பர் இயேசுவும், அன்னை மரியாளும் பெற்றிருக்கும் இடத்தை வேறு யாருமே பெறமுடியாது. அத்தோடு நம் அனைவருக்கும் பாசமிகு தாயாக இருப்பவள்தான்; அன்னைமரி. தாய் பாசத்தோடு மனித குலம் அனைத்திற்கும் நன்மை செய்து வருகிறாள். ஆகவேதான் எந்த பாகுபாடுமின்றி எல்லா இனத்தவரும், சமயத்தவரும் அன்னை மரியாவின் ஆலயம் நோக்கி ஓடி தாங்கள் தேடும் பலன்களை பெற்றுக் கொள்கின்றனர். கானாவூரில் நடந்தேறிய திருமணமும், திருமணத்தில் ஏற்பட்ட குறைபாடும், அந்தக் குறையை நீக்க அன்னை செயல்பட்ட விதமும், நம் அனைவரின் இதயங்களிலும் நீங்கா இடம் பெற்றவை என்பதில் சந்தேகமில்லை. இதுபோல் நாமும் நம்மைச்சுற்றி வாழ்பவர்களும் பெற்றிருக்கும் வரங்களுக்கும், ஆற்றல்களுக்கும் அளவே இல்லை என்று கூறிக்கொள்ள முடியும். இக்கட்டுரையில் "வரமும் வலிமையும் தரும் செபமாலை" பற்றிச் சிந்திப்போம்.

**திருஅவை வரலாற்றில் செபமாலையின் வலிமை**

மனிதன் படைக்கப்பட்டதின் நோக்கமே படைத்தவரை அறிவதும், அன்பு செய்வதும், அவரை அடைவதுமே. மனிதன் தன் இறுமாப்பின், ஆணவத்தின், சுயநலத்தின் காரணமாக போர்களும், பிளவுகளும், சண்டைகளும் ஏற்பட்டபோதெல்லாம் வெற்றியின் ஆயுதமாக இருந்தது செபமும் செபமாலையுமே.

குறிப்பாக சொல்லவேண்டும் என்றால் 1571 ல் கிறித்தவர்க்கும், இஸ்லாமியர்க்கும் லெபாந்தோ என்னுமிடத்தில் நடந்தபோரிலும், 1863 ல் கிறித்தவர்க்கும், துருக்கியர்க்கும் நடந்தபோரிலும் வெற்றி பெறுவதற்க்கு தேவையான வலிமையை வழங்கியது செபமாலை பக்தியே ஆகும். போரில் வெற்றிபெற காரணமாக இருந்த ஆயுதம் செபமாலை செபித்தது என்று சொல்ல முடியும்.

**செபமாலை செபிப்பதால் கிடைக்கும் வரங்கள்**

1. இயேசுவைப்பற்றிய அறிவை பெறுகிறோம்.
2. மீட்புப் பாதையில் மரியாவின் பங்கை புரிந்து கொள்கிறோம்.
3. மூவொரு கடவுள் எவ்வாறு மனிதகுலத்தின் மீது அக்கறை கொண்டு வழி

நடத்துகிறார்கள் என்பதையும் உணர்ந்து கொள்கிறோம்.

4. நாம் பாவம் செய்யாமலிருக்க துண்டுதல் பெறுகிறோம்.
5. நம் மனதில் நம்பிக்கையையும் தைரியத்தையும் பெற்றுக் கொள்கிறோம்.
6. நாம் நேர்மையாளர்களாக, தூய உள்ளத்தவராக வாழ ஆற்றல் பெறுகிறோம்.
7. நமக்காகவும் நம்மவர்க்காகவும் செபிக்கும் பழக்கத்தை உருவாக்கிக்கொள்கிறோம்.
8. குடும்பமாக, குழுவாக சேர்ந்து செபிக்கும் வல்லமை பெறுகிறோம்
9. அருள்பணியாளர்களின் பாதுகாப்பு கவசம் செபமாலை.

**நம்பிக்கையாளர்க்கு அன்னையின் காட்சியும் நோக்கமும்**



திரு அவையின் வரலாற்றில் அன்னை மரியாவின் காட்சிகள் மிக முக்கியமான வைகளாகக் கருதப்படுகின்றன. இன்றளவும் லட்சக்கணக்கில் மக்கள் கூடுகின்ற பிரான்சு நாட்டின் லூர்து மலைக் காட்சியும் (1858) போர்ச்சுக்கல் நாட்டின் பாத்திமா நகர் காட்சியும் (1917) ஏன் நமது நாட்டிலே கப்பலோட்டி களுக்கும், பால்கார சிறுவனுக்கும், முடமான சிறுவனுக்குமென்று ஏராளமானதாக நடந்தேறியுள்ள காட்சிகளில் மரியா மனித குலத்திற்கு தந்த செய்தி மனம்மாற வேண்டும், செபமாலை செபிக்கவேண்டும் என்பதுதான். ஆணவமும். அகங்காரமும், அடாவடித் தனங்களும், சுயநலபோக்குகளும் மலிந்து கிடக்கும் இச்சமுதாயத்தில் மனமாற்றத்திற்கான தூண்டுதல் செபமாலை செபிப்பதன் வழியாக பெற்றுக்கொள்கிறோம். மனமாற்றம் அடையாத சமூகத்தை நாம் கற்பனை செய்து பார்க்கமுடியாது.

**அர்த்தமுள்ள மறை உண்மைகள்**

எனவேதான் செபமாலையின் திருத்தந்தை 13 ம் சிங்கராயர் நாம் வாழும் சமூகத்தின் அவலங்களை கண்டு, மனிதன் எளிமையோடும் தியாகத்தோடும் வாழ உதவிசெய்யும் மகிழ்ச்சி மறை உண்மைகளைத் தியானிக்கவும், துன்பம் வேண்டாம் என்று உதறித்தள்ளும் மனித குலத்திற்குத் துன்பத்தின் வழியே வெற்றி என்று தியானிக்க துயர மறை உண்மைகளையும். மனிதன் தன் மறுவாழ்வு பற்றிய சிந்தனை இல்லாமல் மனம்போன போக்கிலே வாழுகின்ற போது மகிமை மறை உண்மைகளை தியானிக்கவும், அத்தோடு திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அர்த்தமுடைய வாழ்வு வாழ ஒளியின் மறை உண்மைகளை தியானிக்கவும் வழிசெய்தார்.

நாம் வாழும் இந்த நவீன உலகில், வாழ்க்கை தடம் புரண்டு போகின்ற போது காற்றில் இழுத்துச்செல்லப்படும் பட்டம், தான் கட்டப்பட்டிருக்கும் கயிற்றால் சரிசெய்யப்படுவது போல் ஒவ்வொருவர் வாழ்வும் சரி செய்யப்படுவதும் செபமாலை என்னும் கயிற்றாலே. செபமாலை செபிப்போம்; அன்னையின் அருளைப் பெற்று நலமுடன் வாழ்வோம்.



# பெண் குழந்தைகள் உலகின் வெளிச்சம்

அருள்முனைவர் **து. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்**
இயக்குநர், திருப்புமுனை போதைநோய் நலப்பணி, கோட்டாறு மறைமாவட்டம்.

**அறிமுகம்** : பெண் குழந்தையின் அருமையை, பெருமையை, மேன்மையைத் தெரிந்து கொள்ள நாம் பெரிய ஆய்வுகள் செய்ய வேண்டிய தேவையில்லை. சிந்தித்துப் பார்க்க வேண்டியதில்லை. எங்கேயோ தேடி அலைய வேண்டியதில்லை. சற்று உற்று நோக்குங்கள். அது போதும். பெண் குழந்தையின் சிறப்பைக் காட்சியாக நாமே நேரடியாகக் காணலாம். ஒரு பெண் குழந்தை பிறக்கும் தருணம் வீட்டில் ஒளி தவழும் நேரம். அந்த வீடு வெளிச்சத்தால் ஒளிர்கிறது. அவளுடைய முதல் சிரிப்பு, கலகலப்பு, மூச்சின் மென்மை வீடு முழுவதையும் உயிரின் புதிய ஆற்றல் நிரப்புகிறது. ஒரு பெண் குழந்தை சுமையல்ல அவள் ஆசீர், அவள் வீட்டின் ஒளி, எதிர்காலத்தின் புனித விளக்கு.

**ஆண்டின் மிக முக்கியமான நாள்** 2012ஆம் ஆண்டு முதல், ஐக்கிய நாடுகள் சபை அக்டோபர் 11ஆம் தேதியை சர்வதேச பெண் குழந்தைகள் தினமாகக் கொண்டாட ஆரம்பித்தது. இது ஆண்டின் மிக முக்கியமான நாள். இது குழந்தைகள் பாதுகாப்பு, கல்வி மற்றும் உரிமைகளுக்கு உலகம் விழிப்புணர்வுடன் அணுகும் தருணம். உலகில் இன்று சுமார் 110 கோடி சிறுமிகள் (0-18 வயது) வாழ்கின்றனர் (UNICEF 2023). ஒவ்வொரு சிறுமியும் கற்றல், பாதுகாப்பு மற்றும் உரிமை வாயிலாக ஒரு புதிய உலகத்தை உருவாக்குவாள்.

**சங்க மரபும் பெண் குழந்தையின் கண்ணியமும்** : தமிழர் பண்பாட்டில் பெண் குழந்தைகள் எப்போதும் மதிக்கப்பட்டனர். சங்க இலக்கியங்களில் பெண் குழந்தையை "**தெய்வம்**" எனப் போற்றினர். தாயின் கருவறையை உலகின் முதல் ஆலயமாகக் கருதி, பெண் குழந்தை வாழ்க்கையின் ஒளியாகப் பார்த்தனர். ஆனால் பின்னால் சமூகம் வழி தவறியது; அவள் புறக்கணிக்கப்பட்டாள். பெண் குழந்தையை மறுக்கும் சமூகத்தின் வழுக்கல்கள் பாதிப்புகளை உருவாக்கின!

**வரலாற்றில் பாகுபாடு** : இன்றும் உலகில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1.2 கோடி சிறுமிகள் திருமணத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர் (UNICEF 2022). இந்தியாவில் சுமார் 41 லட்சம் சிறுமிகள் பள்ளிக்கு செல்ல முடியவில்லை (UNESCO 2021). குழந்தை தொழிலில் ஈடுபடும் சிறுமிகள் எண்ணிக்கை 1 கோடி 1 லட்சம். இந்த அவலங்கள் நமது இதயத்தையும், சமூகத்தின் எதிர்காலத்தையும் திணறச் செய்கின்றன.

**பெண் குழந்தை** : வீட்டின் தீபம்: ஒரு பெண் குழந்தை வீட்டில் இருக்கும்போது அன்பின் தீபம் ஏறுகிறது. அவள் தம்பிகளை கவனிக்கும் பரிவு, பெற்றோரின் கவலையை குறைக்கும்; அமைதி, குடும்ப உறவுகளை இணைக்கும் வலிமை அனைத்தும் அவளால் தரப்படுகிறது. அவள் பாசத்தின் சின்னம்; அவள் கரிசனையின் களஞ்சியம்; அவள் வீட்டின் ஒளி. ஒரு பெண் குழந்தையின் சிரிப்பு, வீட்டின் சுவற்றில் ஒளிரும் சூரியன் போல. **"The smile of a girl child can light up the darkest home."**

**கல்வியின் வெளிச்சம்** : எதிர்காலத்தை உருவாக்கும் திறவுகோல் கல்வி. உலக வங்கி கூறுகிறது: "**ஒரு பெண் கல்வி கற்றால் அவளுடைய குழந்தைகளின் ஆரோக்கியம் 50% மேம்படும்.**" கல்வியறிந்த பெண் குழந்தை குடும்பத்தையும் சமூகத்தையும்

உயர்த்துகிறாள். இது மேம்பட்ட சுகாதாரம் மற்றும் சமூக ஒற்றுமையை உருவாக்கியுள்ளது. கல்வியின் ஒளி, ஒரு பெண் குழந்தையின் வாழ்வையும், அவளுடைய குடும்பத்தையும், சமூகத்தையும் மலரச் செய்கிறது.

**உலகத்தை ஒளிரச் செய்த சிறுமிகள்**

உலகம் முழுவதும் பல சிறுமிகள் ஒளியாய் விளங்கியுள்ளனர். மலாலா யூசப்சாய், "**குண்டுகள் தடுத்தாலும் கனவுகளைத் தடுக்க முடியாது**" என்பதற்கான சின்னமாக மாறினார்.. கல்பனா சாவ்லா, விண்வெளியில் பறந்து நட்சத்திரங்களைத் தொடக்கூடிய இந்தியப் பெண்ணாக உலக வரலாற்றில் இடம் பெற்றார். சுதா மூர்த்தி, அறிவையும் சேவையையும் ஒன்றாக இணைத்து ஒளியாய் திகழ்கிறார். ஒவ்வொரு பெண் குழந்தையும் நாளைய தலைவி, அவள் தன் குடும்பத்தையும் சமூகத்தையும் மாற்றக் கூடிய தலைசிறந்த சக்தி. **"Educate a girl and you educate a generation."** பெண் குழந்தை வளர்ந்து குடும்பம், சமூகம் இரண்டையும் தாங்கிப் பிடிக்கும் தூணாக, பாதுகாக்கும் அரணாக இருப்பதை நினைவூட்டுகிறது.

**பெண் குழந்தை புனிதம்** : தமிழ் மரபு சொல்கிறது: "**தாயினுஞ் சீர்மை தளர்ந் தோம்பல் நன்றே**" (திருக்குறள்). கிறிஸ்தவத்தில் இயேசுவைத் தந்த கருவறை ஆசீர்வதிக்கப்பட்டது (லூக்கா 11:27). இந்து மரபில் பெண் சக்தியாகவும், உயிர் கொடுப்பவளாகவும் போற்றப்படுகிறார். அனைத்து மதங்களும் ஒரே செய்தியைச் சொல்கின்றன: அவள் ஒளி; இல்லாமல் உலகம் இருள். "**ஒரு பெண் குழந்தையை நேரிய பாதையில் வளர்த்தால், அவள் வளர்ந்து குடும்பத்தையும் சமுதாயத்தையும் கட்டி உயர்த்துவாள்**" (திபா:6). இது சிறுமிகளின் கல்வி, வளர்ச்சி மற்றும் வழிகாட்டல் எவ்வளவு முக்கியமானது என்பதை நினைவூட்டுகிறது.

**பெண் குழந்தையின் சவால்கள்** : ஒரு பெண் என்ற முறையில் இயற்கையாகவே பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. முதன் முதலாவதாக ஒரு பெண் தான் பூப்பெய்தல் பருவமடையும்போது இதை உணர்கிறாள். சுமார் 9 மாதம் ஒரு குழந்தையை, (இன்னொரு உயிரை) பல சிரமங்களுக்கு மத்தியில் தனது உதிரத்தில் சுமக்கிறாள். பிஞ்சுக்குழந்தை வளரும்வரை தன்னைவிட அதன்மீது அதிக அக்கறை காட்டுகிறாள். எவ்வளவு தியாகம், பங்களிப்பு செய்கிறாள் என்று எளிதாக அளவிட்டுவிட முடியாது. சிறுவயதிலிருந்தே சவால்களைச் சந்தித்துப் பழகிப்போன பெண்களால் போகப்போக எந்தச் சவால் வந்தாலும் சாதித்து விடலாம் என்ற மனப்போக்கும், மனப்பக்குவமும், மனத்துணிவும் உருவாகி விடுகிறது.

**மாற்றத்தின் அழைப்பு** : "**பெண் குழந்தையைக் காப்போம், பெண் குழந்தையைப் பாதுகாப்போம்.**" என்ற சமூக மாற்றம் வீட்டிலிருந்து துவங்குகிறது. ஒவ்வொரு குடும்பமும் பெண் குழந்தையைக் வரவேற்க வேண்டும். அரசாங்கம் "**பெண் குழந்தையைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்**" என்ற திட்டங்களை வலுப்படுத்த வேண்டும். பள்ளிகள் சிறுமிகளுக்கான பாதுகாப்பான கல்விச் சூழலை உருவாக்க வேண்டும். சமூக அமைப்புகள் விழிப்புணர்வை ஏற்படுத்தி, உரிமைகளைப் பாதுகாத்து, சமத்துவத்தை வளர்க்க வேண்டும். (**"When we protect and educate a girl, we ignite the light of countless generations").**

**நிறைவாக** : இதயம் விரியும்போது மனிதம் மலர்கிறது. மனிதம் மலரும்போது உலகமே மலர்கிறது. நாம் தெளிவாக உணர்ந்து கொள்வோம். "**ஓர் உறுதியான பெண் தனக்காக மட்டும் நிற்கமாட்டாள். ஆம் ஓர் உறுதியான பெண் சமூகத்திற்காகத் துணிந்து நிற்பாள்**". எனவே பெண் குழந்தை வீட்டில் வெளிச்சமாகும்போது, அந்த வெளிச்சம் தெருக்களிலும், நகரங்களிலும், தேசங்களிலும் பரவி, மனிதகுலத்தின் எதிர்காலத்தை ஒளிரச் செய்கிறது. ஒரு பெண் குழந்தை புன்னகைத்தால், அது ஒரு வீட்டின் புன்னகை மட்டுமல்ல இந்த உலகத்தின் புன்னகை. ஆகவே, நலமான மற்றும் வளமான வருங்காலத்தை உருவாக்க பெண் குழந்தைகளைப் பேணுவோம், மதிப்போம், மாண்போடு நடத்துவோம்.



# வீடு வாழ நாட்டை வாழ வை...

பேரருள்பணி. **ஒய்சிலின் சேவியர்.**

ஊர் முன்னேறினால் தெரு முன்னேறும்! தெரு முன்னேறினால் ஊர் முன்னேறும்! ஊர் முன்னேறினால் நாடு முன்னேறும்! நாடு முன்னேறினால் உலகம் முன்னேறும்! உலகம் முன்னேறினால் மக்கள் முன்னேறுவார்கள். வீடு வாழ வேண்டு மென்றால் நாட்டை வாழ வைக்க வேண்டும் என்கிற தலைப்பு தேரேறி இக்கட்டுரையில் பயணிப்போம் வாரீர்.

பிறந்த நாட்டை நேசிப்பது பெற்றெடுத்த தாயை நேசிப்பதற்கு சமம். நாட்டுப் பற்றும், தேசப்பற்றும் நல்ல தலைமுறைகளை உருவாக்கும். இதனால்தான் பாரதி நாட்டுப் பற்றை உணர்த்தும் விதமாகப் பின்வருமாறு பாடினார்.

**நாமிருக்கும் நாடு நமதென்பதறிவோம்-இது**
**நமக்கே உரிமையாம் என்பதறிவோம்.**



இப்பாடல் வரிகள் நாம் நாட்டுப் பற்றோடும் பாசத்தோடும் வாழ வேண்டும் என்று மட்டுமல்ல அது நமது உரிமையும் என்று உரக்கப் பாடியிருக்கிறார். ஓர் வீடு வாழ வேண்டுமென்றால் நாடு வாழ வேண்டும் என்பதையும் தெளிவாகத் தெரிந்து பாடியுள்ளார் பாரதி.

நாட்டை வாழ வைக்கவில்லை யென்றால் வீட்டை வாழ வைக்க முடியாது. நாட்டை வீழ்த்தினால் வீடும் விழுந்து விடும். வீட்டின் அடிப்படை அஸ்திவாரம் நாடுதான். வீட்டிற்குத் தேவையான அனைத்தும் கிடைக்க வேண்டுமென்றால் நாட்டில் அனைத்து வளங்களும் நிறைந்து குவிந்து கிடக்க வேண்டும். அப்படியில்லையென்றால் வீடும் நாடும் வீழ்ந்து விடும் இதனையே பாரதி தனது பாடலில்,

**இனியொரு விதிசெய்வோம் -அதை**
**எந்த நாளும் காப்போம்**
**தனியொருவனுக்கு உணவில்லை-எனில்**
**சகத்தினை அழித்திடுவோம் எனச் சாடினார்.**

நாடு வாழ வேண்டுமென்ற எண்ணம் மக்கள் மனதில் பதியமிடப்படவேண்டும். நாடு வாழ வேண்டுமாயின் மக்கள் இதயம் பண்பட வேண்டும் பக்குவப்பட வேண்டும் குறுகிய மனப்பான்மை அழிந்து பரந்த மனப்பான்மை ஏற்பட வேண்டும் நாம் வாழும் நாடு என்பது தாய்வீடு என்கிற தாரக மந்திரத்தை தன தாக்கிக் கொள்ள வேண்டும் நாட்டைக் காக்க அர்ப்பணங்கள் மேற்கொள்ள தயாராக இருக்க

வேண்டும். நாட்டுக்குள் இருக்கும் மொழி, இன, கலாச்சார, பண்பாட்டை பேணி வளர்க்கும் உள்ளம் வளர வேண்டும். நாடு தான் பாதுகாப்பு கோட்டை என்கிற எண்ணம் படர வேண்டும். இந்த நாடு எனக்கு என்ன செய்தது என்று கேட்காமல் இந்த நாட்டிற்கு நான் என்ன செய்கிறேன் என்று கேட்க வேண்டும். காரணம் நாம் சார்ந்திருக்கும் நாடு நமது நாடு; நமது தாய்வீடு.

**தமிழிரெண்டு தமிழ் மக்களுண்டு – இன்ப**
**தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு**

என்கிறது பாரதி என்கிற பாரதிதாசனின் கவிதை வரிகளுக்கு ஏற்ப மொழியையும் மக்களையும் இரு கண்களாக நேசிக்க வேண்டும்.

நாட்டின் இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாக்கும் போது தான் வீடும் நன்றாக வாழும். இல்லையேல் வளமான வசந்தமான வாழ்வை நாம் வாழ முடியாது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது வள்ளலாரின் மந்திரம் மிக்க வார்த்தைகள். அதனை உணர்ந்து நாட்டையும் நாட்டில் இருக்கும் காட்டையும் பேணி வளர்த்தால் மட்டுமே வீடும் சுற்றுப்புறமும் ஆரோக்கிய மானதாக அமையும்.

**“எல்லாரும் இன்புற்று இருக்க**
**நினைப்பதுவே அல்லாமல் யாதொன்று**
**அறியேன் பராபரமே”**

என்கிற தாயுமானவரின் இனிய வரிகளுக்கு வலி கொடுக்காமல் வழி கொடுக்க முன் வருவோம். நாட்டையும் காட்டையும் காக்கவில்லை என்றால் நாடும் வீடும் விழுந்துவிடும். எனவே வீட்டைக் காக்க நாட்டை காப்போம். வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்கிற தீய எண்ணத்தை தீக்கிரையாக்குவோம். நாம் 30 கோடியாய் வாழ்ந்தாலும் சிந்தனையில் ஒன்றாய் வாழ்வோம். செப்பு மொழிகள் 18 ஆக இருந்தாலும் நம் நாடு என்கிற ஒரே சிந்தனையில் வாழ்வதற்கு பாரதியின் பாடல் அழைப்பு விடுக்கிறது.

**“முப்பது கோடி முகமுடையாள் உயிர்**
**மொயம்புற வொன்றுடையாள்**
**செப்புமொழி பதினெட்டுடையாள் – எனில்**
**சிந்தனை ஒன்றுடையாள்!!”**

என்பதற்கிணங்க வாழ்வோம். நமது நாடு பழம்பெரும் நாடு; நாமெல்லாம் அதன் மக்கள் என்பதில் பெருமை கொள்வோம்.

**பாரத நாடு பழம்பெரும் நாடு–நீரதன்**
**புதல்வர் இன்னினை வகற்றாதீர் என்றார்**

பைந்தமிழ் புலவர் பாரதியார், எனவே வீடு வளம் பெற; வீடும் வீதியும் வாழ; நாட்டையும் வீட்டையும் வாழ வைப்போம். நாடு வாழ்ந்தால் வீடு வாழும்; வீடு வாழ்ந்தால் தான் தனிமனிதன் ஒவ்வொருவரும் வாழ்வான் என்கிற எண்ணத்தோடு வாழ்வோம். நாட்டு நலன் வீட்டு நலனாய் மாற உழைப்போம்! உயர்வை காண்போம்.

# தன்னம்பிக்கை

**வானம் என்றால்**
**ஆயிரம் நட்சத்திரங்கள் வரும்**
**வாழ்க்கை என்றால்**
**ஆயிரம் துன்பங்கள் வரும்**
**சூரியன் வந்தால்**
**நட்சத்திரங்கள் மறைவது போல**
**தன்னம்பிக்கை இருந்தால்**
**துன்பங்கள் அனைத்தும் மறந்து**
**போகும்...**

**ம. டேவிட் டிலன்,**
முளகுமூடு.



# உலக மின் கழிவு தினம்

**சேவியர்,** பரக்குன்று.

அக்டோபர் 14ம் நாளை உலக மின் கழிவு தினமாக நாம் நினைவு கூர்ந்து வருகிறோம். இந்த நாளில் மின் கழிவுகளால் உலகம் சந்திக்கின்ற சிக்கல்களையும், அதில் நமக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியும் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம்.

ஒரு கிறிஸ்தவ இதழில் எதற்கு மின்கழிவு பற்றிய கட்டுரை என நீங்கள் யோசிக்கலாம். ஒரு கிறிஸ்தவனாக நமக்குத் தரப்பட்டிருக்கும் முதல் கடமை இறைவனின் படைப்பைப் பாதுகாப்பது தான் (ஆதி 2:15). கடவுள் மனிதனுக்குக் கொடுத்த முதல் கட்டளை '**பண்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்**' தான். பண்படுத்த வேண்டிய நாம் நிலத்தைப் புண்படுத்திக் கொண்டிருக்கிறோம் எனில் அதைப் பற்றி சிந்திப்பது அவசியமல்லவா?

**1. இது நமக்கான கட்டளை!**

மின்கழிவுகளால் உருவாகின்ற வேதியல் விஷத்தன்மைகள் கடவுளின் படைப்பைக் காயப்படுத்துகின்றன. மெர்குரி, ஈயம், ஆர்சனிக் போன்ற விஷத்தன்மைகள் மின் கழிவுகளிலிருந்து வெளிவருவதாய் அறிவியல் நம்மை எச்சரிக்கிறது. இவை நிலத்தையும், நீரையும் அதன் மூலமாய் பயிர்களையும், உயிர்களையும் பாதிக்கிறது.

சமூகத்தில் இத்தகைய கழிவுகள் நிறையும் போது இறைவனின் இயற்கை சேதமடைகிறது, மனிதனின் நலவாழ்வு சிதிலமடைகிறது. இதைச் சரியான வகையில் மறுசுழற்சிக்கு உட்படுத்த வேண்டிய கடமை நமக்கு உண்டு.

படைப்பைக் காயப்படுத்துவது, படைப்பாளியை அவமானப்படுத்துவதுக்கு சமம் என்பதை நினைவில் கொள்வோம்.

**2. ஏழைகள் மீதான தாக்குதல்!**

மின்கழிவுகள் ஏழைகளின் மீதான தாக்குதல் என்பதை நாம் பல வேளைகளில் உணர்வதில்லை. உலக மின்கழிவுகள் பெரும்பாலும் ஏழை நாடுகளிலேயே கொட்டப்படுகின்றன. ஏழை நாடுகள் வேறு வழியில்லாமல் இத்தகைய தாக்குதலை ஏற்றுக் கொள்கின்றன.

பணக்காரர்கள் அதிகாலையிலேயே ஐபோன் வாங்கக் காத்திருக்கும்போது, ஏழைகள் மின் சிதிலங்களுக்குள் சிக்கி அழிந்து கொண்டிருக்கிறார்கள். லேட்டஸ்ட் தான் கிரேட்டஸ்ட் என்னும் நுகர்வுக் கலாச்சார போதையிலிருந்து கிறிஸ்தவர்கள் வெளியே வர வேண்டும்.

ஏழையை ஒடுக்குகிறவர் அவரை உண்டாக்கினவரை இகழ்கிறார் ( நீதி 14:31) என்கிறது விவிலியம். இத்தகைய மின்கழிவுகள் கடவுளை இகழ்வதன் ஒரு வெளிப்பாடே. இந்த எளியவர்களில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்கிறார் இயேசு. மின் கழிவுகளை நாம் கொட்டும்போதும் இந்த வசனமே நமக்குள் எதிரொலிக்கட்டும்.

**3. நம் பேராசையின் பிரதிபலிப்பு!**

வேண்டாமென ஒதுக்கும் மின் பொருட்களே மின் கழிவுகளாகின்றன. முன்பெல்லாம் ஒரு மர்பி ரேடியோவை தலைமுறை தலைமுறையாய் நாம் வைத்திருந்தோம். இப்போது சந்தையில் ஒரு புது டிவி வந்தால், இருப்பதை கழித்துவிட்டு புதியதை சேர்த்துக் கொள்கிறோம். ஆளுக்கு ரெண்டு போன், வீட்டுக்கு ரெண்டு டிவி, கணக்கற்ற எலக்ட்ராணிக் பொருட்கள் என நம் வாழ்க்கை மாறிவிட்டது.

சேர்க்க வேண்டும் எனும் பேராசைச் சிந்தனையிலிருந்து வெளியே வந்து, பிறருக்குக் கொடுக்க வேண்டும் எனும்

சிந்தனையை வளர்த்துவோம். நம்மை பொருட்கள் அடிமைப்படுத்தும் போது, நாம் விசுவாசத்தில் வீழ்ந்து விடுகிறோம்.

“**மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது**” என இயேசுவே நேரடியாக எச்சரிக்கிறார் என்பதைக் கவனத்தில் கொள்வோம்.

போதும் என்ற மனதைக் கொண்டிருப்பது, இயற்கையைப் பாதுகாக்கும் ஒரு எளிய வழி என்பதை உணர்வோம்.

**4. எதிர்காலத்தின் அச்சுறுத்தல்**

நமது பிள்ளைகளின் நலவாழ்வுக்காக பணத்தைச் சேமிக்கிறோம், காப்பீடுகளை வாங்கி வைக்கிறோம். ஆனால் அவர்கள் வாழப் போகும் நிலத்தை, நீரை, காற்றை மாசுபடாமல் காக்க வேண்டும் என நினைப்பதில்லை. எதிர் தெருவில் குப்பை கொட்டினால் நமக்கு பிரச்சினை இல்லை என அறிவீனமாய் யோசிக்கிறோம்.

நாளைய வாழ்வின் விஷம் இன்றைய தினத்தில் தான் விதைக்கப்படுகிறது. இலவசமாய்க் கிடைத்தால் காய்கறி கடைகளிலிருந்து பிளாஸ்டிக் பைகளை அள்ளி வருகிறோம். இவையெல்லாம் நமது சூழலை மாசுபடுத்துகின்றன. அதே போல தான் மின்கழிவுகளும்! நாம் கழிவுகளாய் வீசும் ஒவ்வொரு கைபேசியும், நாளைய நிலத்தின் விஷக்கிருமிகளே.

நல்லவருடைய சொத்து அவருடைய வழிமரபினருக்குச் சேரும் என்கிறது நீதிமொழிகள். நாம் எதை சேமிக்கிறோம்? எதிர்கால தலைமுறைக்கு எதைப் பரிசளிக்கிறோம்? இந்த பூமி கடவுளுடையது என்கிறது சங்கீதம், அதை நினைவில் கொள்கிறோமா? தேவையற்ற பொருட்களை வாங்காமல் ஒதுக்குவது கூட மானுடத்துக்குச் செய்யும் சேவையே!

நம் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் கற்றுக் கொடுக்கும்போது மாசுகளை விலக்கும் வழிகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

**5. பகிர்வோம்! பகர்வோம்**

நமக்கு இனிமேல் தேவையில்லை என நினைக்கும் பொருட்கள் கூட பிறருக்குப் பயனளிக்கலாம். குப்பையில் வீசும் முன் தேவையில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப் பழகுவோம். இரண்டு ஆடை உள்ளவன் ஒன்றை மற்றவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் என்றார் இயேசு. இரண்டு போன் உள்ளவனும் அதை செயல்படுத்தலாம்!

நல்ல பயன்பாட்டில் இருக்கும் பொருட்களை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இன்று ஏராளம் இல்லங்களும், காப்பகங்களும், ஏழைத் தெருக்களும் இருக்கின்றன. கொஞ்சம் சிரமம் பார்க்காமல் அவர்களைச் சந்திக்கலாம். அவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம்.

பகிர்தலே இறைவனின் மனசு, பதுக்குதல் அல்ல! இதோ அனைத்தையும் புதிதாக்குகிறேன் என்கிறது விவிலியம். நாமும் நம் நிலத்தைப் புதிதாய் மாற்றியமைக்கலாம். மாற்றம் நம்மிடமிருந்தே தொடங்க வேண்டும். ஒரு தனி நபரின் உதாசீனமே ஒரு சமூகத்தின் அழிவுக்கான தொடக்கப் புள்ளி. ஒரு தனி மனிதரின் முயற்சியே சமூக மாற்றத்தின் தொடக்கப் புள்ளி. அதை நினைவில் கொள்வோம்.

பொருட்களை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது மட்டுமல்ல, மின் கழிவுகளை எப்படி அப்புறப்படுத்துகிறோம் என்பதும் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமே

**நிறைவாக**, மின் கழிவு தினம் என்பது அதைப்பற்றி சிந்தித்து விட்டுக் கடந்து செல்வதல்ல. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. செயல்படத் தொடங்குவோம். பெருமழையின் துவக்கம் சிறு துளியே. நீங்கள் எதைச் செய்தாலும் அதை இறைவனின் மகிமைக்காய் செய்யுங்கள் என்கிறது கொரிந்தியர் நூல். இந்த விஷயத்திலும் இறைவனுக்கு ஏற்புடைய வகையில் செயல்படுவோம். இறைவன் நம்மிடம் தந்த நிலத்தை நாமே பண்படுத்துவோம், பயன்படுத்துவோம், அழகுபடுத்துவோம், பாதுகாப்போம்! அதுவே கிறிஸ்தவர்களுக்கான அழைப்பு.

ஒன்றுபடுவோம், நல்ல ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்.

# முதியோர் காப்பீர் தோழர்களே

தமிழ்மாமணி
அருள்நிதி. S.M. செபஸ்டியான்
பேராசிரியர், மனவளக்கலை யோகா.

முதுமை என்பது நல்முத்தாம்
முதிர்ந்து பழுத்த நல்வித்தாம்
இதுவே குடும்ப நல்சொத்தாம்
இதனை மனதில் வைப்போமே!

இன்றைய இளையோர் நாளைக்கு
இனிக்கும் நல்ல முதியோராம்!
என்றும் இதனை எண்ணிடுவோம்
எழுச்சிப் பெற்று வாழ்ந்திடுவோம்!

அம்மா அப்பா நாளைக்கு
ஆற்றல் குன்றும் வேளையிலே
சும்மா எங்கும் ஓரத்தில்
சுருண்டு வீழ வையாதீர்!

தாத்தா பாட்டி வீட்டினிலே
தரமாய் விளைந்த நெல்லிக்கனி!
பாத்தா அவர்களைக் கலங்கிடாமல்,
பரமன் இயேசுவின் ஆசியுண்டு!

மூத்தோர் சொல்லும் முதுநெல்லியும் முன்னே
கசக்கும் பின்னினிக்கும்!
காத்தல் கடனே முதியோரை!
கண்மணி போலக் காப்பீரே!

எந்த அளவை அளப்பீரோ
என்றும் அதுவே அளக்கப்படும்!
தந்த சொத்தை, வீட்டினை
தமக்கும் அவர்க்கும் எனவைப்பீர்!

மாமா மாமியை முதுமையிலே
மனித நேய உள்ளத்துடன்
தாமே காத்தல் எந்நாளும்
தன்னிக ரில்லா நற்கடனாம்!

நிலையும் குலைந்து நிற்கின்ற
நமது அம்மா தந்தையாரை,
விலைமதிப் பில்லா முதியோரை
வேதனைப் பட்டிட வையாதீர்!

இன்றைய பச்சை ஓலைகள்
இனியொரு நாளில் காய்ந்திடுமே!
அன்றைய நிலைகள் தனைஎண்ணி
அறிவுடன் காப்பீர்! முதியோரை!

பெற்று வளர்த்து கல்விதந்து
பெருமை பெற்றிட வளர்த்தோரை
சற்றும் கண்கள் கலங்கிடாது
சாந்தமாய் காப்பீர் சோதரரே!

உனக்கு உண்டு எனக்குண்டு
உதிரும் முதுமைப் பருவங்கள்
தனது இந்நிலை முன்னுணர்ந்து
தயவு செய்வீர் முதியோர்க்கு!

அன்னை தந்தை தெய்வங்கள்
அன்புத் தாத்தா பாட்டியெலாம்
அன்பின் உச்சம் அறிவீரே!
அரவணைப் பீரே நேயமுடன்!



# வறுமை ஒழிந்ததா? வசந்தம் மலர்ந்ததா?

அருட்பணி. ம. டைட்டஸ் மோகன்

வறுமை என்பது காலியான பை! வாழ்க்கையின் ஒவ்வொரு விடியலும், ஒவ்வொரு மூச்சும், ஒரு கணக்கீட்டைச் சுமந்தே வருகிறது. அடுத்த உணவு எங்கிருந்து வரும்? இன்றைய கடனைத் திருப்பிச் செலுத்தும் வழி எது? இந்த மாதம் குழந்தையின் பள்ளிக் கட்டணம் கட்ட இயலுமா? ஒரு நீண்ட, இருண்ட நிழல் போல், ஒவ்வொரு நாளையும் சஞ்சரிக்கும் இக்கேள்விகள் இன்றும் வறுமை உயிர்ப்புடன் இருப்பதையே எச்சரிக்கின்றன.

வறுமைக்கு பல முகவரிகள் உண்டு. சிலருக்கு வறுமை என்பது ஒரு காயப்பட்ட மனம். அது சந்தோஷத்தை அனுபவிக்க விடாது. அண்டை வீட்டில் பிறந்த சிரிப்பு, "**அவர்களுக்கு எப்படி முடிகிறது?**" என்ற



ஐயத்தைத் தூண்டும். இது தன்னம்பிக்கையைத் தின்று, மனிதர்களின் ஆத்மாவில் ஒரு குறையை உருவாக்கும். பலருக்கு, வறுமை என்பது ஒரு சங்கிலியில்லா சிறை. எங்கும் செல்ல முடியும், ஆனால் எங்கும் செல்ல இயலாது. இங்கு கனவுகள் என்பவை சொர்க்கத்தில் இருந்து விழும் ஒரு துளி மழை போன்றவை. அவற்றைப் பிடிக்க முயலும் முன்பே, பூமி அவற்றை உறிஞ்சி விடுகிறது. இன்னும் சிலருக்கு வறுமை குடும்பங்களின் பழமையான புகைப்படங்களில் இருந்து நம்பிக்கையை மெல்லும். அது பெற்றோர்களின் கண்களில், தங்கள் குழந்தைகளுக்கு அவர்களால் கொடுக்க முடியாததைப் பார்த்து ஒரு மௌன வெட்கத்தைப் பாய்ச்சும். அது குழந்தைகளின் பள்ளி நூல்களில், எதிர்காலம் என்ற பக்கத்தை ஒரு கற்பனைக்கு அப்பாற்பட்ட கதையாக மாற்றும்.

**அக்டோபர் 17 – சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்**

வறுமையில் வாடும் மக்களின் குரல்களை உலகிற்கு உணர்த்துவதும், வறுமை ஒழிப்புக்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் இந்த நாளின் முக்கிய நோக்கங்கள். ஐக்கிய நாடுகள் சபை இந்த தினத்தை அறிவித்தபோது, "**வறுமையே இல்லாத உலகத்தை உருவாக்குவோம்**" என்ற கனவு பலரின் மனதில் எழுந்தது. ஆனால், இன்று நாம் திரும்பிப் பார்க்கும்போது, அந்தக் கனவு எந்த அளவுக்கு நனவாகியிருக்கிறது என்பது ஒரு முக்கிய கேள்வி.

கடந்த சில பத்தாண்டுகளில், வறுமை ஒழிப்பில் உலகளாவிய அளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பல நாடுகளில் கோடிக்கணக்கான மக்கள் வறுமைக் கோட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி இதற்கு முக்கிய காரணம். குறிப்பாக, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதார மேம்பாடுகள், அரசின் சமூகநலத் திட்டங்கள் போன்றவை வறுமையைக் குறைக்க உதவியுள்ளன. இந்த முன்னேற்றங்கள் நம்பிக்கையைத் தந்தாலும், வறுமை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டதா என்றால், பதில் "**இல்லை**" என்பதே.

**இந்தியாவில் வறுமை ஒழிந்துவிட்டதா?**

இல்லை. இந்தியாவில் வறுமை விகிதம் குறைந்துள்ளது. ஆனால் இலக்கு எண்களுக்கு அப்பாற்பட்ட சவால்கள் நிறைந்துள்ளன. கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த வறுமையும், நகர்ப்புறங்களில் குடிசைவாழ் மக்களின் பல்துறை வறுமையும் தொடர்கிறது. சமூக-பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஒரு வலுவான சமூகப் பிரச்சினையாக உள்ளன. இங்குள்ள கார்ப்பரேட்டுகள் மக்களை தற்காலிக வேலைகளில் சிக்கவைத்து, நிலையான வாழ்வாதாரத்திலிருந்து வெகு தொலைவில் வைத்து இலாபம் ஈட்டுகின்றன. இதனால் இங்கு வறுமை இன்று பல்வேறு உருவங்களில் மறைந்து, மாற்றமடைந்து, இன்னும் நம்மிடையே வலுவாக உள்ளது. அது இப்போது ஒரு குழந்தையின் வயிற்றுப் பசியாக இல்லாமல், அதன் கல்வியில் இருந்து வெட்டி விடப்படும் வாய்ப்பாக இருக்கலாம். அது ஒரு வயதானவரின் மருந்து இல்லாத தவிப்பாக இருக்கலாம். அது ஒரு இளைஞனின் திறமைகள் பூர்த்தி அடையாது மறைந்து போகும் ஏக்கமாக இருக்கலாம்.

வறுமையை ஒழிப்பது என்பது, வயிற்றை நிரப்பும் பணி மட்டுமல்ல. அது மனதில் இருந்து பயத்தையும், கண்களில் இருந்து நிராசையையும், வாழ்க்கையில் இருந்து "**இல்லை**" என்ற சொல்லையும் ஒழிப்பதாகும். இது ஒரு காலியான கையை நிரப்புவதை விட, அந்தக் கைக்கு ஒரு கனவைக் கட்டும் சக்தியைத் தருவதாகும். ஒரு சமூகமாக, நாம் அனைவரும் ஒரு குடும்பம். ஒருவரின் வறுமை, நம் அனைவரின் தோல்வி. ஒருவரின் முன்னேற்றம், நம் அனைவரின் வெற்றி. வறுமை எனும் நீண்ட குளிர்காலம் முடிய, நாம் அனைவரும் சேர்ந்து ஒரு வசந்தத்தை வளர்க்க வேண்டும். அந்த வசந்தம், ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் பசுமையாகப் பூத்து, கனவுகள் எனும் பூக்களை ஆண்டு முழுவதும் மலர வைக்கும்.

**புரிவோம்! செயல்படுத்துவோம்!**

வறுமை என்பது மனிதகுலத்தின் பழமையான மற்றும் கொடிய எதிரிகளில் ஒன்றாகும். வரலாறு முழுவதும், மனிதன் அதனோடு போராடியே வந்திருக்கிறான். தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரத்தில் மனிதகுலம் சாதித்துள்ள அற்புதமான முன்னேற்றங்களைப் பார்த்தால், "**வறுமை ஒழிந்து விட்டதா?**" என்ற கேள்வி தானாகவே எழும். ஆனால் பதில், ஒரு சிக்கலான உண்மையைக் கொண்டுள்ளது. இவ் வுண்மையைப் புரிந்து அதற்கேற்ப செயல்பாடுகளை முன்னெடுப்பது காலத்தின் அவசியம்.

வறுமை என்பது வெறும் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல. இது கல்வி, சுகாதாரம், உணவு மற்றும் சமூக பாதுகாப்பு போன்ற பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியது. உலக வங்கியின் சமீபத்திய அறிக்கைகளின்படி, இன்னும் பல மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். காலநிலை மாற்றம், போர்கள், பொருளாதார நெருக்கடி, மற்றும் அரசியல் ஸ்திரமின்மை போன்ற காரணங்கள் வறுமையை மேலும் அதிகரிக்கின்றன. உதாரணமாக, கோவிட்-19 பெருந்தொற்று, பல பத்தாண்டுகளாக வறுமை ஒழிப்பில் ஏற்பட்ட முன்னேற்றங்களை ஒரே இரவில் பின்னுக்குத் தள்ளியது. உலகளாவிய பொருளாதார மந்தநிலை, விலைவாசி உயர்வு, மற்றும்

வேலையின்மை போன்றவை புதிய வறுமைப் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.

வறுமை ஒழிப்பு என்பது ஒரு தொடர்ச்சியான முயற்சி. இது ஒரு சமூகப் பொறுப்பு. ஒவ்வொரு தனிநபரும், அரசும், சமூக அமைப்புகளும் இதில் பங்காற்ற வேண்டும். அனைவருக்கும் தரமான கல்வி கிடைப்பதை உறுதி செய்தல், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தான உணவு கிடைப்பதை உறுதி செய்தல், மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் வறுமையை ஒழிக்க உதவும். வறுமையை முழுமையாக ஒழிக்க, உலகளாவிய ஒத்துழைப்பும், நிலையான திட்டங்களும் அவசியமானவை.

வறுமை ஒரு பனிபோன்ற மலைபோல் அதன் மேலே இருந்து பார்ப்பவர்க்கு சிறிதாகத் தெரியும்; ஆனால், அதன் அடிவாரத்தில் நிற்பவர்க்கு அது ஒரு பெரும் சுமையாகும். தொழில்நுட்ப முன்னேற்றம், சரியான பொருளாதாரக் கொள்கைகள், சமூக நீதி, மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் மட்டுமே இந்த மலையைக் குறைக்க முடியும். வறுமை ஒழிப்பு என்பது ஒரு இலக்கு மட்டுமல்ல, ஒரு தொடர்ந்த நடைமுறையும்கூட. அந்த இலக்கை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம், ஆனால் இலக்கை அடைந்துவிடவில்லை.

சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை கொண்டாடும் இத்தருணத்தில், வறுமை ஒழிப்பில் நாம் அடைந்த முன்னேற்றங் களுக்காக மகிழ்ச்சியடைவோம். அதேசமயம், இன்னும் மீதமுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கான உறுதியையும் மேற்கொள்வோம். வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்டு, அனைவருக்கும் கண்ணியமான வாழ்க்கை கிடைக்கும் நாள் வரும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

# அறத்தை போற்று






அறத்தை போற்றி அன்பை பெருக்கிடு
ஆருயிர் காத்திட ஆணவம் தவிர்த்திடு
இன்னல் களைந்திட இன்பம் பெருகிட
ஈடு இணையில்லா கல்வியை கற்றிடு
ஒழுக்கம் பேணி ஒளியாய் திகழ்ந்திடு
ஒற்றுமை ஓங்கிட ஓர் குலம் ஆகிடு
ஈதல் புரிந்திடு ஈசனை வணங்கிடு
இனிதாய் பேசி இயல்பாய் வாழ்ந்திடு
நாவை அடக்கி நாளும் சிறந்திடு
நானிலம் புகழும் நாவன்மை பெற்றிடு
பொறாமை அகற்றி பொறுமை காத்திடு
பொங்கும் வெகுளி பொறுப்பாய் அடக்கிடு
ஐம்புலன் காத்து ஐயங்கள் அகற்றிடு
ஐம்பொன் போல அகிலத்தில் மிளிர்ந்திடு
வன்முறை ஒழித்திடும் இன் முகம் போற்றிடு
வறியவர் வாழ்வில் ஒளியை ஏற்றிடு
மலர்கள் மணத்தை பரப்புதல் போன்று
மண்ணில் மனிதம் மலர்ந்திட உழைத்திடு
போதை தவிர்த்த பாதையைக் காட்டிட்டு
சோதனை வென்று சாதனை படைத்திடு



**கடலம்மா ஜூடி சுந்தர்**
கோவளம்



# காணாமல் போன கடிதங்களும், மகிழ்ச்சியும்!

**குமாரி ஆதவன்**

கடிதங்கள் என்றென்றும் அழியாத ஆவணங்கள்; பல கடிதங்கள் காலத்தால்



தவிர்க்க முடியாத வரலாறுகள்; சில கடிதங்கள் கோடி பணம் மதிப்பு பெறும் பொக்கிஷங்கள். மேற்கண்ட மதிப்புகள் யார், யாருக்கு அல்லது எதற்கு எழுதியது என்பதைப் பொறுத்து வேறுபடுகின்றது. உலகத் தலைவர்கள், போராட்ட வீரர்கள் எழுதிய கடிதங்கள் ஏலம் இடப்படுவதும் அவை பெரும் பணம் கொடுத்து வாங்கப்படுவதையும் நாம் அவ்வப்போது செய்திகளில் படிக்கிறோம். பலரது கடிதங்கள் ஆவண காப்பகங்களில் பாதுகாத்துப் பேணப்படுகின்றன. வரலாற்றாசிரியர் ஹெலனிகஸ் பதிவு படி, கி.மு. 500 இல் பாரசீக ராணி அடோசா தன் கையால் எழுதிய கடிதமே உலகின் முதல் கடிதமாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் மகாத்மா காந்தி, நேரு, பட்டேல், நேதாஜி, இந்திரா காந்தி, காமராஜர், அண்ணா போன்ற தலைவர்களின் நினைவகங்களுக்குச் சென்றால் அவர்கள் எழுதிய கடிதங்கள் பாதுகாப்பு வளையங்களுக்குள் பதுங்கி இருப்பதைப் பார்க்க முடியும். இனிவரும் காலங்களில் இதுபோன்ற சிறப்புகள் கடிதங்களுக்குக் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். காரணம், இந்தத் தலைமுறை கடிதம் எழுதுவதைத் தவிர்த்து நவீன ஊடகங்களான ஈமெயில், புலனம் போன்றவை மூலமாகச் செய்திகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். ஓரிரு நாட்களில் தானாகவோ அவர்கள் மூலமோ அவை அழிந்து விடுகின்றன.

கடிதங்களில் தான், மனிதன் தன் உணர்வுகளையும், மொழி ஆளுமையையும் வெளிப்படுத்த முடியும். ஊடகங்கள் வாயிலாகக் கடிதம் எழுதும் போது கடிதத்தின் உயிரும், ஆன்மாவும் இல்லாமல் போய்விடுகிறது. பலருக்கும் பகிர வாய்ப்பு உள்ளமையால் உணர்வற்ற கடிதங்கள் தான் ஊடகங்களில் எழுதப்படுகின்றன. அதுவும் மொழிப் பயன்பாடு முற்றிலும் அழிந்து போய், தமிழை ஆங்கிலத்தில் எழுதி ஏதோ வினோத விளையாட்டு போல் கடிதங்கள் திரிந்துவிட்டன.

கையால் எழுதப்பட்ட ஒரு கடிதம் தரும் மகிழ்வை வேறு எந்த ஊடகப் பயன்பாட்டுக் கடித முறைகளாலும் தர முடியாது. நான் மாணவர் விடுதியில் தங்கி கல்லூரியில் படிக்கும் போதும், நாகலாந்தில் ஆசிரியப் பணிக்காகச் சென்றிருந்தபோதும் என் அம்மா எழுதிய கடிதங்கள், அம்மா இறந்துவிட்ட நிலையிலும் உயிரோடு என் கையில் இருக்கின்றன. அக்கடிதங்களைத் தொடுகின்ற போது அம்மாவின் மடியில் படுத்துக் கொள்கிற ஆறுதலும் தேறுதலும் கிடைக்கிறது. இந்த அனுபவம் ஐம்பதுகளில் வாழ்கிற

எல்லோருக்கும் இருக்கும்.

ஒரு காலத்தில் வெளிநாடுகளுக்கும் வேறு மாநிலங்களுக்கும் தொழிலுக்கு சென்றவர்கள் தங்கள் பெற்றோர் அல்லது



மனைவிக்குக் கடிதம் தான் எழுதுவார்கள். காரணம் அன்று அலைபேசி பயன்பாடு இல்லை; தொலைபேசியும் ஊரில் ஒருவர் அல்லது இருவர் வீடுகளில் தான் இருக்கும். ஆகவே, கடிதத் தொடர்புதான் தங்கள் உறவை, அன்பை, ஆதரவை வெளிப்படுத்துகிற ஒரே ஊடகம். இந்தியாவின் தென் மாநிலங்களுக்குள் ஒரு கடிதம் வந்து சேர ஏழு நாட்கள் வரை ஆகும். 14 நாட்களுக்கு ஒரு முறை தான் ஒருவர் மற்றவர் நலனை அறிய முடியும். இந்த நாட்களுக்குள் பதில் வரவில்லை என்றால் பதறவும், அழவும், கோபப்படவும் செய்வார்கள். வெளிநாட்டிலிருந்தும் வட மாநிலங் களிலிருந்தும் கடிதங்கள் வந்து சேர ஒரு மாதம் கூட ஆகும். இவர்கள் மனநிலை, எப்படிக் கொதித்தபடி இருக்கும் என்பதை அனுபவம் பெற்றவர்களால் மட்டுமே முழுமையாக உணர முடியும். இதற்கெல்லாம் மேல் பதற்றமும் கண்ணீரும் நிறைந்தது ராணுவத்தில் பணியாற்றுவோர் நிலை.

அன்றெல்லாம் ஒரு ஊரில் கடிதம் படிக்க தெரிந்தவர்களே குறைவாகத்தான் இருப்பார்கள். அவர்களில் எல்லோரிடமும் கடிதத்தைப் படித்துக் காட்டுங்கள் என்று கூறவும் முடியாது. காரணம், சிலர் ஊருக்கே படித்துக் காட்டி விடுவார்கள். எனவே, அதற்கான சிலரை அனுபவத்தின் மூலம் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். என்னுடைய பள்ளிக்கூட பருவத்தில் கூட பல அம்மாக்கள் தங்கள் கணவர் அல்லது மக்கள் அனுப்பும் கடிதங்களைப் படித்துக் காட்டவும், பதிலெழுதவும் கொண்டு வந்திருக்கிறார்கள். கடிதத்தைப் படித்துக் காட்டும்போது அனுப்பிய பணத்திற்கான கணக்கு சரி இல்லை என்று திட்டியபடியும் கடிதம் வரும். அம்மாவை (மாமியாரை) சரியாக கவனிக்கவில்லை என்று குற்றம் சாட்டியும், மிகக் கேவலமான வார்த்தைகளை உபயோகித்தும் கடிதங்கள் வரும். படித்துக் காட்டும் போது பலர் அழுதபடியும் ஓடி இருக்கிறார்கள். மீண்டும் விளக்கமாக அவர்கள் சொல்லும் வார்த்தைகளை எல்லாம் எழுதுவது என்பது சுவாரசியமானது மட்டுமல்ல, மனித மனங்களைப் படிப்பதுமாகும். குறிப்பாக மனைவிக்குக் கடிதம் எழுதும் கணவர்கள் ஏராளமான கட்டளைகளை பிறப்பித்து எழுதி இருப்பார்கள். அவர்கள் வீட்டிற்குப் போகக்கூடாது; குறிப்பிட்ட வீட்டுத் திருமணத்திற்குப் போகக்கூடாது என எழுதி நிம்மதியைக் கெடுத்திருப்பார்கள். ஆனால், திட்டியபடியேனும் கடிதம் வரவில்லையென்றால் இருபுறமும் துடித்து தான் போவார்கள். வேடம் போடாத பாசமும் கோபமும் அன்றைய கடிதங்களிலும் வாழ்விலும் இருந்தது. எளியவர்களின் இத்தகையக் கடிதங்கள் வரலாறாகவிடினும் வாழ்வியல் எதார்த்தங் களைச் சுமந்து வந்தவைகள். இந்தச் சுமையிலும் ஏற்பட்ட சுகம் அலாதியானதுதான்.

1928 இல் ஜவகர்லால் நேரு சிறையில் இருந்த போது தன் மகள் இந்திரா காந்திக்கு எழுதிய 30 கடிதங்கள் "**தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்**" எனப் புத்தகமாக மலர்ந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இதைத்

தொடர்ந்து அவர் மகளுக்கு எழுதிய 176 கடிதங்கள் தொகுக்கப்பட்டு **"உலக வரலாறு"** என்ற நூலாக வெளிவந்தது. உலகத் தலைவர்களுக்கு நேரு எழுதிய 368 கடிதங்களை அவரே தொகுத்து புத்தகமாக 1958 இல் வெளியிட்டார். இப்படி உலகப்புகழ் பெற்ற கடிதங்கள் பல உண்டு. ஆபிரகாம் லிங்கன் தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதம் உலக மொழிகளிலெல்லாம் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய மகாத்மா காந்தி மற்றும் பாரதியாரின் கடிதங்கள் குறிப்பிடத்தக்கவை. பாரதி தனது மனைவி செல்லம்மாளுக்காகவும், பிறருக்காகவும் பல கடிதங்களை எழுதியுள்ளார். அண்ணா மற்றும் கலைஞர் கருணாநிதி ஆகியோர் தம் உடன்பிறப்புகளுக்கு முரசொலியில் எழுதிய கடிதங்கள் தூங்கிக் கிடப்போரையும் துள்ளி எழ வைத்துவிடும்.

எழுத்தாளர் சுந்தர ராமசாமி தன் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளிவந்துள்ளது. முதுபெரும் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் தொடர்ந்து கடிதங்கள் எழுதுவார். எனக்கு அவர் எழுதிய ஆறு கடிதங்களும் முத்துக்கள் போல் இருக்கின்றன. ஒவ்வொரு கடிதங்களும் இந்த மண்ணின் வரலாறோடு பின்னிப்பிணைந்து கிடக்கிறது. மானுட மனங்களையும் அவர்தாம் பாடுகளையும் சுமந்து நிற்கின்றன.

வரலாற்றின் போக்கையே மாற்றிய பல புகழ்பெற்ற கடிதங்களும் உண்டு. வெறும் விசாரிப்புகளைத் தாண்டி, சமூகம், அரசியல் மற்றும் வாழ்வின் பல்வேறு அனுபவங்களை பதிவேற்றம் செய்யும் முக்கிய ஆவணங்களாக இருக்கின்றன. நியூயார்க்கில் உள்ள அதிபர் பிராங்க்ளின் டி ரூஸ்வெல்ட் நூலக அருங்காட்சியகத்தில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இரண்டாம் உலகப்போர் காலத்தில்(1943) அதிபருக்கு எழுதிய கடிதம் டிஜிட்டல் வடிவில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மார்ட்டின் லூதர் கிங் தன் தோழர்களுக்கு எழுதிய கடிதம் அனைத்தும் சமூகத்தை அசைத்து பார்த்த கடிதங்கள். ஏப்ரல் 1963 இல், அலபாமா மாகாணத்தில் உள்ள பர்மிங்காமில் அமைந்துள்ள சிறையில் இருந்து ஒத்துழையாமை பற்றி எழுதிய இவரின் கடிதம் 20 ஆம் நூற்றாண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க கடிதமாக போற்றப்படுகிறது. சிறையில் இருந்தவாறே தனக்கு கிடைத்த துண்டு காகிதங்களிலும், செய்தித்தாளின் ஓரங்களிலும் தனது கருத்துகளை அவர் எழுதி வந்தார். **"ஓர் இடத்தில் நிலவும் அநீதி, மற்ற எல்லா இடங்களிலும் கிடைக்கும் நீதிக்கு ஆபத்தாகிறது"** என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்த தத்துவம் இன்று உலகமெங்கும் சட்டத்துறையில் கையாளப்படுகிறது.

இப்படி வாழ்வை, வரலாற்றை ஆவணப்படுத்திய கடிதம் எழுதும் பண்பு இன்று காணாமல் போய்விட்டது. கடிதங்களைச் சுமந்து நின்றிருந்த அஞ்சலகப் பெட்டிகளுக்கும் நிரந்தரப் பூட்டு போடப்பட்டு விட்டது. மக்கள் கடிதம் எழுதி அனுப்பாததால் அஞ்சல்துறை கடித அஞ்சல் சேவையை இவ்வாண்டு நிறுத்தியுள்ளது. கடைசியாய் இவ்வாண்டு என் மாணவர்களை கடிதம் எழுத வைத்து, அவர்கள் உறவினர்களிடமிருந்து பதில் பெற வைத்தது கடிதத்தின் கடைசி மகிழ்வாய் நெஞ்சில் பூத்து நிற்கிறது. கடிதங்களைச் சுமந்து கொண்டு நம் வீடுகளுக்கு மகிழ்ச்சிப் பொட்டலங்களைப் போஸ்ட் என்ற சத்தத்தோடு தந்து சென்ற அஞ்சல்காரர்களை, அடுத்த தலைமுறை வரலாற்றில் தான் படிக்க முடியும். ஈமெயிலும் இன்டர்நெட்டும் தூரத்தையும் நேரத்தையும் குறைத்து தகவல்களை உடனுக்குடன் தரும் அதிசயத்தை நிகழ்த்தினாலும், அஞ்சல்காரர் தந்து சென்ற ஒரு கடிதம் தந்த மகிழ்வையும், உறவு நெருக்கத்தையும் காலகாலத்திற்கும் நினைவாகி நிற்கிற அரவணைப்பையும் தரமுடியாது. நான் என் அம்மாவின் கடிதத்தை அம்மாவாய் நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறேன். கடிதங்கள் ஆன்மாவில் கலந்த மகிழ்வு!



# மாணவர்களின் நிலை அன்றும் இன்றும்...

கவிஞர் **ஆகிரா**

மாணவர்கள் நாளைய சமூகத்தின் எதிர்கால நம்பிக்கை. இன்று அவர்கள் எவ்வாறு உருவாகின்றார்களோ, அல்லது உருவாக்கப் படுகின்றார்களோ அதைப் பொறுத்தே அவர்களின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது எனவே தான் ஒரு மாணவரின் எதிர்காலம் வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள் தீர்மானிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

கல்வி என்பது கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் கற்றுக் கொள்ளும் மாணவர் ஆகிய இருவரின் பாதையும் நேர்கோட்டு பாதையாக இருக்கும் போது தான் வெற்றி பெறுகிறது. நீர் தேடும் பறவை போல கல்வியைப் பெற்றுக் கொள்ளும் ஆர்வத்தோடும், கல்விக்கான தாகத்தோடும், ஆசிரியரை தேடி வரும் மாணவர் சமூகம், பசித்த வயிற்றுக்குச் சோறு ஊட்டும் தாய் போல, நாடி வந்த மாணவரின் அறிவு பசியை தீர்க்கும் ஆசிரியரும் ஒற்றை இலக்கோடு பயணிக்கிற போது தான் கல்வி வெற்றிபெறுகிறது.

**"Education plays an crucial role in shaping individuals and societies. Providing them with knowledge, skills and values necessary for personal growth and societal progress".**

ஒரு மாணவன் பெறுகிற கல்வி அவனுக்கானது மட்டுமல்ல; வாழும் சமூகத்துக் கானதுமாகும். இந்த புரிதல் இன்று மாணவர் சமூகத்திடம் இருக்கிறதா என்பது ஐயப்பாடு.

எல்லோருக்கும் கல்வி எளிதில் கிடைக்காத ஒரு காலம் இருந்தது. பின்னர் படிப்படியாக அந்த இடைவெளி நீக்கப்பட்டு கொண்டே வந்தது. இன்று எல்லோருக்கும் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எல்லோருக்கும் கல்வியை உறுதிப்படுத்துவதில் அரசின் பல்வேறு முன்னெடுப்புகள் பாராட்டுக்குரியவை. இந்த கல்வியை முறையாக பெற்றுக்கொள்ள வேண்டிய மாணவச் சமூகம் அதை எப்படி கையாளுகிறது என்பதில் தான் கால மாற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி, சிந்தனை மாற்றம், சமூக ஊடகங்களின் பயன்பாடு மற்றும் எதிர்நோக்கு ஆகியவற்றில் பல நடைமுறை சிக்கல்களைக் காண முடிகிறது.

**மாணவர்கள் அன்று...**

➲ கல்வியின் மீது மதிப்பு, ஆசிரியர் மீது மரியாதை காட்டிய ஒரு மாணவர் சமூகம் இருந்தது அன்று ஆசிரியர் "குரு" நிலையில் வைத்துப் போற்றப்பட்டார்.

➲ ஆசிரியர் என்பவர் கற்றவர், அறிவு மிகுந்தவர், வாழ்வை திருத்துபவர் என்ற நேர்மறை சிந்தனை இருந்தது. எனவே கல்வியோடு ஒழுக்கமும், சமூகப் பங்கேற்பும் கொண்ட மாணவர்கள் உருவானார்கள்.

➲ கீழ்ப்படிந்து கல்வியை கற்பது ஒரு ஒழுக்கச் செயல்பாடாக பார்க்கப்பட்டது.

➲ "என் பையன் சொல் பேச்சு கேட்கவில்லை என்றால் அடிச்சு படிக்க வையுங்கள்" அவன் தவறுகளை திருத்துங்கள். உங்களை நம்பித்தான் என் பிள்ளையை விட்டிருக்கேன் நீங்கள் கண்டித்தாலும் தண்டித்தாலும் நான் ஏன் என்று கேட்க மாட்டேன். படிக்கணும், நல்ல பிள்ளையா வளரணும் என்பதே ஆசிரியர்களிடம் பெற்றோரின் விண்ணப்பமாக இருந்தது.

➲ ஆசிரியரிடம் அடி வாங்கி விட்டு வீட்டுக்கு வந்தால் வீட்டிலும் அடி விழும்.

➲ ஒழுக்கம், நேரந்தவறாமை, முறையான சீருடை அணிதல், முடி வெட்டுதல், நகம் வெட்டுதல், காலைக் கடன்களை நிறைவு செய்துள்ளனரா? என அனைத்திலும் ஆசிரியரின் கண்காணிப்பு மாணவர் மீது இருந்தது. கண்டிப்பும், தவறு செய்தால் தண்டனை கிடைக்கும் என்ற எச்சரிக்கை உணர்வும் மாணவர்களை ஒழுக்க நெறியில் நடக்க வைத்தது.

➲ பாட அறிவும், ஆசிரியர் – மாணவர் –

பெற்றோர் உறவும் சீராக இருந்தது.

எனவேதான் அன்று கல்வி கற்று உயர்ந்த பலரும் ''என்னை என் பெற்றோரும் ஆசிரியரும் கண்டித்து வளர்த்ததால் தான் இன்றைக்கு நல்ல நிலையில் இருக்கிறேன்'' என்று கூறுவதை கேட்க முடிகிறது.

**மாணவர்கள் இன்று...**

➲ ஆசிரியருக்கு மரியாதை செலுத்துவதை அவமானமாக பார்க்கிறார்கள்.

➲ மாணவர்களின் மூர்க்கமான போக்கு ஆசிரியர்களை அச்சுறுத்தும் நிலை உருவாகியுள்ளது. பாடத்தை நடத்தி முடித்து வகுப்பை விட்டு வெளியேறுவது சவால் மிகுந்த ஒன்றாக மாறி இருக்கிறது.

➲ தங்களின் நகைப்புக்கும் கேலிக்கும் ஆசிரியரை உள்ளாக்குதலும், சாதிய உணர்வுகள் சில இடங்களில் வெளிப்படுவதும் மிக ஆபத்தான வெளிப்பாடு.

➲ சில மாணவர்கள் மதிப்பெண்களை மட்டுமே இலக்காகக் கொண்டு மனப்பாடம் செய்து, நாம் என்ன படிக்கிறோம்? எதற்கு படிக்கிறோம்? என்ற புரிதல் இல்லாமல் பயணித்து பின் உயர்கல்வியில் தடுமாறுகிறார்கள்.

➲ சீருடையை இறுக்கமாக தைத்து அணிதல், பல வடிவங்களில் சிகை அலங்காரம் செய்தல், நவீன காலணிகளை அணிதல் போன்றவை ஒரு மாணவனுக்கான தோற்றத்தை மாற்றி அமைத்திருக்கிறது.

➲ சமூக ஊடகங்களில் பார்ப்பதையும் கேட்பதையும் வாழ்க்கையாக நம்புகிற ஒரு கலாச்சார சூழல் மாணவர்களிடம் உருவாகியிருப்பது வேதனை.

➲ பேருந்து நிலையம் போன்ற பொது இடங்களில் மாணவர்கள் நடந்து கொள்ளுகிற விதம் காண்போரை முகங்சுழிக்கச் செய்கிறது.

➲ பாடஆசிரியர் வகுப்புக்கு வரும்போது எழுந்து வணக்கம் சொல்வதற்கு கூட தயக்கம் காட்டுகிற மாணவர்களைத் தான் இன்றைய வகுப்பறைகள் கண்டு கொண்டிருக்கிறது.

வீட்டுப்பாடம் செய்யவில்லை, ஒழுக்கக்கேடான செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் என்று எந்த தவறையும் கண்டிக்க முடியாது. மீறி கண்டித்தால் ஆசிரியர்கள் மிரட்டப்படுகிறார்கள். இவ்வாறு மிரட்டுவதால் நமக்கு எதற்கு வம்பு என்று பாடத்தை முடிப்பதோடு கடமை முடிந்தது என்று வேதனையோடும் வலியோடும் ஒவ்வொரு நாளும் பள்ளி வளாகத்திற்குள் சென்று திரும்புகிற ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

நவீன காலச் சூழலில் பிள்ளைகளுடன் நேரம் செலவழிக்காத பெற்றோர்கள், பிள்ளைகள் எதை கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் உடனடியாக தேவையை பூர்த்தி செய்கிறார்கள். அதை தங்கள் கடமையாக நினைக்கிறார்கள். விளைவு கேட்டதைப் பெற்றே பழகிப் போன மாணவர்கள் தோல்வியை, இழப்பை தாங்கிக் கொள்கிற மனநிலையில்லாதவர்களாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய சூழலில் ஆசிரியர்கள் மாணவனைக் கண்டித்தால் ஊடகங்களில் ஆசிரியரின் புகைப்படத்துடன் செய்தி வரும் அளவுக்கு பெரிதாக்கி அவர்களை குற்றவாளிகளாக சித்தரிப்பது கல்வியின் போக்கை மாற்றியுள்ளது. சில இடங்களில் சில ஆசிரியர்கள் செய்யும் தவறுகள் பள்ளி வளாகத்திற்குள் பேசி முடிக்காமல் வெளி உலகத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டுவதால் ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகம் தன் மதிப்பை இழந்து நிற்கிறது.

கல்வியை கற்பிக்கிற இடத்தில் கற்பிக்கிறவர்களுக்கும், கற்றுக் கொள்கிறவர் களுக்கும் உறவு பலப்படவில்லை என்றால் தொழில்நுட்பம் எவ்வளவு தான் உச்சத்திற்கு சென்றாலும் அதனால் ஒரு ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்க முடியாது.

ஒழுக்கத்தையும் கல்வியையும் கற்றுக்கொள்ள தானே பள்ளிக்கு அனுப்புகிறோம். மாணவன் தவறு செய்தால் அவனை கண்டிக்கிற உரிமையும், கடமையும் பெற்றோரை விட ஆசிரியருக்கு அதிகம் இருக்கிறது என்பதை பெற்றோரும் சமூகமும் உணர வேண்டும். வகுப்பறையில் திருத்தப்படாத மாணவன் பட்டை தீட்டப்படாத வைரம். பட்டை தீட்டப்பட்ட வைரம் தான் ஒளிவீசும். அது மதிப்பு மிகுந்தது.

# பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்
## குழித்துறை மறைமாவட்டம்

### 1. கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

***மறைக்கல்வி பணிக்குழு* (BTCT பயிற்சி)**

➢ மறையாசிரியர்களுக்கான அடிப்படை மறைப்பயிற்சியின் (BTCT) 25-ம் பயிற்சி பாசறை டிரினிட்டி மேய்ப்புபணி நிலையம் பயிற்சி அரங்கில் நடைபெற்றது. 91 நபர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவில் பணிக்குழு செயலர் அருள்பணி. V. ஆன்ருஸ் அவர்கள் பயிற்சி பெற்ற மறையாசிரியர்களை வாழ்த்தி சான்றிதழ் வழங்கினார்கள்.

➢ முளகுமூடு, மாத்திரவிளை, திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. ஆசிரியரே மாணவர்களுக்கான துணைக்கருவி, ஆண்டுதிட்டம், மற்றும் புதிய நிர்வாகிகளின் கடமைகள் பற்றி பயிற்சி நடைபெற்றது. 138 மறையாசிரியர்கள் பங்கேற்றார்கள்.

***திருவழிபாட்டு பணிக்குழு***

➢ காரங்காடு, முளகுமூடு, வேங்கோடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. திருவழிபாடு ஓர் அறிமுகம், சங்க ஏடுகள் என்ற தலைப்புகளில் அருள்பணி. சுனில், அருள்பணி. மைக்கேல் அலோசியஸ், அருள்பணி. ஷைன் கருத்துரை வழங்கினார்கள். 66 நபர்கள் பங்கேற்றனர்.

***விவிலிய பணிக்குழு***

➢ ஆகஸ்ட் 09, 2025 காரங்காடு மறைவட்டப் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. விவிலியம் ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் அருள்பணி. ரீகன் கருத்துரை வழங்கினார்கள். 10 நபர்கள் பங்கேற்றனர்.

### 2. பட்டியலினத்தார் பணிக்குழு

➢ மாத்திரவிளை, முளகுமூடு, காரங்காடு, புத்தன்கடை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுகூட்டங்கள் நடைபெற்றது. **மனித உரிமைகள்** பற்றி பயிற்சி நடைபெற்றது. 28 நபர்கள் பங்கேற்றனர்.

**கறுப்பு தினம்**

➢ குழித்துறை மறைமாவட்ட பட்டிய லினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழு ஆகஸ்ட் 10 கறுப்புநாள் கவன ஈர்ப்பு அறப்போரட்டம் 10-08-2025 அன்று பிற்பகல் 2 மணிக்கு முளகுமூடு மரியன்னை பசிலிக்கா வளாகத்தில் வைத்து குழித்துறை மறைமாவட்ட ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மறைமாவட்ட பட்டியலின பணிக்குழு இயக்குநர் அருட்பணி. மரிய சூசை ஆகஸ்ட் 10 கறுப்பு தினம் குறித்து விளக்கி கூறினார். சிறப்பு விருந்தினராக அனைத்திந்திய ஆதிவாசிகளின் கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் திருமிகு. சுரேஷ் சுவாமியார் காணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### 3. தொழிலாளர் பணிக்குழு

➢ முளகுமூடு, மாத்திரவிளை, காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றது. 80 நபர்கள் பங்கேற்றார்கள். "**நஞ்சில்லா விவசாயம்**" பற்றி திரு. ராஜகுமார் பயிற்சி வழங்கினார்கள்.

➢ 17.08.2025 அன்று மதியம் 2 மணிக்கு உண்ணாமலைகடை அலுவலகத்தில் வைத்து Labour commission (WIF) இதற்கான தெளிவு கூட்டமானது இயக்குநர் அருள்பணி. மைக்கேல் ராஜ் அவர்கள் தலைமையில், பேரருள்பணி. மார்ட்டின் (பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்) அவர்கள் முன்னிலையில் அருள்பணி.காட்வின் செல்வ ஜஸ்டஸ் (TNBLC Secretary) அவர்களால் கருத்துக்கள் கூறப்பட்டது. 10 நபர்கள் வருகைத்தந்தார்கள்.

### 4. சமூகத்தொடர்பு பணிக்குழு

➢ சத்தீஸ்கர் அருட்சகோதரிகள் கைதை கண்டித்து கண்டன போராட்டம் மற்றும்

சுதந்திரதின விழா சிறப்பு நிகழ்ச்சியாக, புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி, முளகுமூடு மாணவர்களின் கலை நிழச்சிகள், மேலும் மறைமாவட்டம் அருள்பணியாளர்களின் குருத்துவ வெள்ளி விழா திருப்பலி மற்றும் அனுபவ பகிர்வு தேனருவி Youtube channel – ல் ஒளிபரப்பப்பட்டது.

➢ அன்றாட இறைவார்த்தை செபங்கள், இறை ஒளியில் நிறைவாழ்வு, அன்றாட வாசக குறிப்புகள், புனிதர்கள் வரலாறு, ஞாயிறு சிந்தனைகள் ஆகியவை Whatsapp குழுவில் பதிவிடப்பட்டது.

**5. நலம் பணிக்குழு**

➢ மல்லன்விளை, முகமாற்றூர், கப்பியறை, நுள்ளிவிளை, பரக்குன்று, வேப்புவிளை, சிராயன்குழி, முள்ளங்கினாவிளை, கோணங்காடு, சுங்கான்கடை, வட்டவிளை, அப்பட்டுவிளை, செம்பருத்திவிளை, கோழிப்போர்விளை, மேல்புறம் ஆகிய பங்குகளில் நலம் பணிக்குழு உருவாக்கப்பட்டு மருத்துவ சலுகை அட்டை வழங்கப்பட்டது.

**6. பெண்கள் பணிக்குழு**

➢ திரித்துவபுரம், முளகுமூடு, வேங்கோடு, மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றது. 92 நபர்கள் பங்கேற்றனர்.

➢ காரங்காடு மறைவட்ட சிறப்பு பயிற்சி 30.08.2025 அன்று நடைபெற்றது. 62 நபர்கள் பங்கேற்றனர். அருள்பணி. கால்வின் அவர்கள் போரின் தாக்கம் பொருளாதார ஏற்றம் பற்றி பயிற்சி வழங்கினார்கள்.

➢ புத்தன்கடை மறைவட்ட மாநாடு 06.08.2025 அன்று நடைபெற்றது. 63 நபர்கள் பங்கேற்றனர். தற்கொலை எண்ணங்களை தவிர்த்து மகிழ்ச்சியாக வாழ்வோம் என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.

**7. சிறைப்பணிக்குழு**

➢ சிறை இல்லவாசிகளின் இல்லங்கள் சந்தித்து புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டது.

**8. நற்செய்தி பணிக்குழு**

➢ திக்கணங்கோடு தியான இல்லம், நட்டாலம், வெட்டுமணி ஆகிய திருத்தலங்களில் இரவு விழிப்பு செபம், நற்செய்திக் கொண்டாட்டங்கள் நடைபெற்றது. மேலும் பரக்குன்று, பரமன்விளை ஆகிய பங்குகளில் நற்செய்திக் கொண்டாட்டங்கள் நடைபெற்றது.

**9. குடும்பநலம் பணிக்குழு**

➢ திருமண பதிவு செய்தவர்கள் : 09

➢ திருமண பயிற்சி முடித்தவர்கள் : 134 நபர்கள்

➢ புதிய பாடத்திட்டம் உருவாக்கல் கூட்டம் நடைபெற்றது.

**10. சிறார் பணிக்குழு**

➢ வேங்கோடு, புத்தன்கடை, முளகுமூடு, மாத்திரவிளை, காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு மற்றும் பயிற்சி நடைபெற்றது. குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சி, சிறார்களை எவ்வாறு வழிநடத்துவது ஆகிய தலைப்புகளில் அருள்பணி. பிரித்வி தாமஸ் மற்றும் அருள்பணி. நவீன் ஆகியோர் பயிற்சி வழங்கினார்கள். 149 நபர்கள் பங்கேற்றனர்.

**மாநாடுகள் :**

➢ 16.08.2025 அன்று வேங்கோடு மறைவட்டம் காப்புக்காடு மண்டல மாநாடு புனித அந்தோணியார் சமுகநலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. "**நிறைவாழ்வை நோக்கி பயணிக்கும் சிறார்கள்**" என்ற தலைப்பில் அருட்பணி. பிறைட்சிங் அவர்கள் பயிற்சியளித்தார். சிறார்கள் வழிகாட்டிகள் என 186 நபர்கள் பங்கேற்றனர்.

**செயல்தளபயிற்சி :**

➢ 16.08.2025 அன்று திரித்துவபுரம் மறைவட்டம் செயல்தள பயிற்சி 2 நடைபெற்றது. "**இயேசுவின் இலட்சிய பாதையில் பயணிக்கும் சிறார்களாக**" என்ற தலைப்பில் அருள்பணி. பிருத்விதாமஸ் மற்றும் அருள்பணி. பிரைட்சிங் அவர்கள்

பயிற்சியளித்தார். 405 நபர்கள் பங்கேற்றனர்.

**11. அன்பிய பணிக்குழு**

➢ முளகுமூடு, காரங்காடு, மாத்திரவிளை, திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு மற்றும் பயிற்சிகள் நடைபெற்றது. 233 நபர்கள் பங்கேற்றனர். சிறுசேமிப்பு பழக்கத்தை அதிகப்படுத்துவோம், திருமண திட்டம் அமலாக்கல் ஆகிய தலைப்புகளில் பயிற்சி நடைபெற்றது.

➢ மணலிக்கரை,முளகுமூடுஆகிய இடங்களில் செயல்தள பயிற்சிகள் நடைபெற்றது. அருட்பணி. ஆல்வின் விஜய் அவர்கள் அன்பியத்தின் முக்கியத்துவம், சவால், செயல்பாடு, பற்றி பயிற்சி வழங்கினார்கள். 64 நபர்கள் பங்கேற்றனர்.

**நலத்திட்ட உதவிகள்** :

➢ கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவ செலவிற்காக பங்கு, ஒருங்கிணையம் சார்பாக ரூ. 5, 35,380.00 வழங்கப்பபட்டது.

**12. இளைஞர் பணிக்குழு**

➢ ஆகஸ்ட் 22,24 வரை இளைஞர் இயக்க இரண்டாம் கட்ட பயிற்சி திரித்துவபுரம் இளைஞர் பணிக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது. சமூக பகுப்பாய்வு, இயேசுவின் ஆளுமை, விவிலிய பகுப்பாய்வு, பாலியல் மதிப்பீட்டு கல்வி ஆகிய தலைப்புகளில் பயிற்சி நடைபெற்றது 22 நபர்கள் பங்கேற்றனர்.

➢ புத்தன்கடை, மாத்திரவிளை, முளகுமூடு, காரங்காடு, வேங்கோடு, திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு நடைபெற்றது. 115 நபர்கள் பங்கேற்றனர். சமூக பகுப்பாய்வு, சுதந்திரம் தேடும் இளைஞர்கள், இளைஞர்களும், வன்முறைகளும், குமரி மண் சந்தித்த சுதந்திர போரட்டாக்காரர்கள், உடல் நலம் பேணும் இளைஞர்கள் ஆகிய தலைப்புகளில் பயிற்சி நடைபெற்றது.

➢ புத்தன்கடை மறைவட்ட கலைவிழா 17.07.2025 புத்தன்கடை ஆலயத்தில் நடைபெற்றது. 65 நபர்கள் பங்கேற்றனர்.

அருள்பணி. **நீ. மார்ட்டின்**
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாள

அடுத்த இதழ் "**இணைந்து பங்கேற்போம் ஒன்றித்து வாழ்வோம்**" என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. புத்தாண்டு முதல் நமது புதிய தேடல் இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தங்களது கவிதை, கட்டுரை, கதை துணுக்குகள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-10-2025**-ம் தேதிக்கு முன் புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஆசிரியர்**
**புதிய தேடல்**

# Engagements of the Bishop: September 2025

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Commission Co-ordination Meeting – Trinity Pastoral Centre | Unnamalaikadai | 03.00 pm |
| 02 | Curia | Bishop's House | 09.30 am |
| 03 | Feast Mass | Mannanvilai | 06.00 pm |
| 04 | Feast Mass | Theruvukadai | 06.00 pm |
| 05 | Feast Mass at St. Mary's Basilica | Mulagumoodu | 06.30 pm |
| 07 | Church blessing | Pallavilai | 04.30 pm |
| 08 | Grotto Blessing | Kappiyarai | 06.30 pm |
| 09 | Curia | Bishop's House | 09.30 am |
| 12 | Feast Mass | Vellicode | 06.00 pm |
| 14 | Feast Mass | Munchirai | 09.00 am |
| 20 | KIDSS Day Celebration - Trinity Pastoral Centre | Unnamalaikadai | 10.00 am |
| 21 | Contact Visit & Feast Mass | Kaliakkavilai | 09.00 am |
| 23 | Curia | Bishop's House | 09.30 am |
| | KIDSS Board Meeting | Puthukkadai | 03.00 pm |
| 26 | Feast Mass | Thumpali | 06.00 pm |
| 28 | Contact Visit & Confirmation Mass | Vattam | 09.00 am |
| 29 | Feast Mass | Sirayankuzhi | 06.30 pm |
| 30 | Curia | Bishop's House | 09.30 am |

Reg. No : 0740

# GM

## YOGA & NATUROPATHY CLINIC

Gnanamony Memorial Life Care Clinic

## ஞானமணி நினைவு

யோகா மற்றும்
இயற்கை மருத்துவமனை

திருவட்டார்

**Dr.BRINDHA BNYS**

☎ 94427 11782

- யோகா சிகிச்சை
- உணவு சிகிச்சை
- எடை இழப்பு திட்டம்
- அனைத்து வயதினருக்கும் வழக்கமான யோகா வகுப்புகள்
- மூலிகை மருந்துகள்
- ஓசோன் சிகிச்சை
- அக்கு பஞ்சர்
- அக்கு பிரஷர்
- பிசியோ தெரபி
- நீர் சிகிட்சை
- நீராவி குளியல்

**SPECIAL TREATMENT FOR LADIES**


MASSAGE


ACUPUNCTURE


PHYSIOTHERAPY


STEAM BATH


HYDROTHERAPY


ACUPRESSURE

**OTHER TREATMENTS**


HERBAL MEDICINE


DIET THERAPY



OZONE THERAPY


YOGA

Date of Publishing : **20-09-2025**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office


# VINS GLOBAL
## import export

**Puthukadi**
**Near Old Theater Opposite**



**Visaa process**

**Ticket booking**

vinsmiba57@gmail.com

9003955849



## Export all things in all countries

FAST DELIVERY





Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Joseph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode